Registered as a NewsPaper பக்கங்கள் 16 விலை ரூபா 6·00

ஈழநாதம்

வெள்ளிமஞ்சரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
நல்லூர் கிளை நூலகம்

கரும்புலிகள் சிறப்பிதழ்

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 20 05-08-94 வெள்ளிக்கிழமை ஓசை 168

## சட்டவிரோத முகவரிடம் 15.000 போலி கடவுச்சீட்டு

ஏறத்தாழ 15000 சிறிலங்கா கடவுச் சீட்டுக்கள், சிங்கப்பூரிலுள்ள சட்ட விரோதமான, ஐரோப்பிய நாடுகளுக்கான பயண முகவர்களிடம் இருப்பதாக சிறிலங்கா குடியகல்வு, குடிவரவு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சிங்கப்பூரைத் தவிர, இதேபோலான தலா 10,000 கடவுச் சீட்டுக்கள் பாங் (15 பக்கம் பார்க்க)

# பலாலி தளம் மீதான கரும்புலி தாக்குதல்; 3 தினம் வெற்றி நாள் நிகழ்ச்சிகள் ஏற்பாடு

பலாலி விமானத் தளத்தின் மையப் பகுதி வரை ஊடுருவி கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தவும் அவ் வெற்றியைக் கொண்டாடவும் இன்று முதல் மூன்று தினங்களுக்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து யாழ். மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில்;

சிறிலங்காவின் இராணுவத் தளங்களில் மிகப் பெரிய பலம் பொருந்திய பலாலி இராணுவதளத்திற்குள் துணிகரமாகப் புகுந்து விமானப் படைத் தளத்தின் மையப் பகுதி வரை ஊடுருவிச் சென்று, ஊரில் நம் மக்கள் உழைப்பதற்கும், உலாவருவதற்கும், கடலிலே தம் வாழ்க்கைத் தொழிலைச் செய்ய விடாதும் பயணங்கள் மேற்கொள்ளவிடாதும் எம் மக்களின் வாழ்வைப் பறித்த ''பெல்'' ரக உலங்கு வானூர்தியையும், நெருப்புத் தணலைக் கக்கும் உருக்கு மிருகமாம் எதிரியின் ''பவள்'' கவசவாகனத்தையும் முற்றாக அழித்து சிங்களப்படை (16 ஆம் பக்கம் பார்க்க)

# மல்லாகம் குடியிருப்புகள் மீது அகோர விமானக் குண்டுவீச்சு

## இருவர் பலி; 9 பேர் படுகாயம்

(நமது நிருபர்)

**மல்லாகம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று அதிகாலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா விமானமொன்றுமேற்கொண்ட அகோர குண்டுவீச்சுத்தாக்குதலில் இருவர் பலியாகியதுடன், ஒன்பது பேர் படுகாயம் அடைந்தனர். ஒரு வீடு தரைமட்டமாக்கப்பட்டதுடன் பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.**

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் பேரிரைச்சலுடன் தாழப் பறந்து வந்த புக்காரா விமானமொன்று 15 நிமிட நேரத்தில் ஏழு குண்டுகளை இலக்கின்றி வீசித்தள்ளியது. இவற்றில் ஒன்று வயல் வெளியில் ஆழப்புதைந்து வெடிக்காத நிலையில் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டது.

இக் குண்டு வீச்சு தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்ட பதினொரு பேரில் இருவர் யாழ். போதனா மருத்துவ மனையில் மரணமானார்கள். ஏனைய ஒன்பது பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை பலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பல பயன்தரு மரங்கள் வெட்டி வீசப்பட்டதுடன் கால்நடைகள் பலவும் கொல்லப்பட்டன.

இக் குண்டுவீச்சுக்கு முன்னதாக அதிகாலை 12.15 மணியளவில் உலங்கு வானூர்தி ஒன்று இப் பகுதியை வட்ட (15 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சில் பலியானோர்; காயமடைந்தோர் விபரம்

(மல்லாகம்)

மல்லாகம் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று அதிகாலை 2.15 மணியளவில் புக்காரா விமானம் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் தர்மராசா இராசலட்சுமிதேவி(38), சவரிமுத்து றொபிசியன் (19) ஆகிய இருவருமேபலியானவர்கள்ஆவர்.

மேலும் தர்மராசா தனுஜா (09), ஆசீர்வாதம் பரமேஸ்வரி (33), தர்மராசா அனிதா (2), சதானந்தம் மேரிகொறட்டி (41), பிரான்சிஸ் சேவியர் (47), மரியகுறட்டி (40), நாகேந்திரசீலன் கமலாசினி (38), கணேஸ் (45) ஆகியோர் உட்பட ஒன்பது பேர் காயமடைந்தனர். (சி) (தி)

## உணவகம் மீது எறிகணைவீச்சு இருவர் பலி; இருவர் காயம்

(வடமராட்சி)

அச்சுவேலியில் உணவகம் ஒன்றின் மீது பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்களில் ஒன்று விழுந்து வெடித்ததில் இருவர் பலியாகினர் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 2.45 மணியளவில் அப் பகுதியை சூழ பதினைந்திற்கு மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டு விழுந்து வெடித்தன.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உணவகம் மீது ஏவப்பட்ட ஷெல் குசினிப் பகுதியில் உணவு தயாரித்துக் கொண்டிருந்தவர்கள் மீது வீழ்ந்து வெடித்ததில் தில்லைநாதன் (40), கணேசலிங்கம் (40) என்ற இருவரும் பலியாகினர். இவர்கள் இருவரும் இடம்பெயர்ந்த குடும்பஸ்தர்களாவர்.

மற்றும் செ. சதீஸ்குமார், ஸ்ரீ என்பவர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப் பகுதியில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன, காலை 2.45 மணி முதல் 3.30 மணிவரை நடைபெற்ற தாக்குதலையடு (15 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் நிலை மீது கைக்குண்டு வீச்சு

### 4 பொலிசார் காயம்

(வவுனியா)

வவுனியா-மன்னார்வீதியில் புகையிரத நிலையத்திற்குஅருகில் உள்ள படையினர் நிலையம் மீது இனம்தெரியாதோர் மேற்கொண்ட கிரனைற் தாக்குதலின் போது 4பொலிசார் கரயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு இரவு 9.45 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதனை (15 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பொலிசார் காயம்

(வவுனியா)

வவுனியா காமினி வித்தியாலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பொலிசாரின் சோதனை நிலையத்தின்மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிரனைட் தாக்குதலினால் இரு பொலிசார் படுகாயம் அடைந்தனர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

## இரு படையினர் காயம்

வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பலாலிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் இரண்டு படையினர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

## வவுனியா பகுதியில் ஐவர் கைதாகினர்

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொருட்களை வடபகுதிக்குள் கடத்திவர முற்பட்ட இரண்டு லொறிகளை கைப்பற்றியதுடன் ஐந்து நபர்களையும் பொலிசார் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைக்குழு தெரிவித்துள்ளது.

வவுனியா பகுதியில்வைத்து 4800 பற்றரிகளை வடபகுதிக்குள் கொண்டுசெல்ல முற்பட்ட இரண்டு பேரையும் ஏற்றிவந்த லொறியையும் கைப்பற்றியுள்ளதாகவும் ஈரப்பெரியகுளம் பகுதியில் மேற்கொண்ட சோதனையின் போது மற்றொரு லொறி பிடிபட்டதாகவும் இதில் 2 தன்னியக்க அன்ரனா சீரமைப்பு சாதனங்கள், 2 வானொலிக்கருவிகள், 254 திசையறிகருவிகள், 534 பென்ரோச்கள், போட்டோபிரதி இயந்திர உதிரிப்பாகங்கள், (15 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் அவசரம்

'பிநெகற்றிவ்' பிரிவு இரத்தம் அவசரம் தேவைப்படுகிறது. அத்துடன் அனைத்து பிரிவு இரத்தங்களும் தேவைப்படுவதாகவும் இரத்ததானம் செய்ய முன்வருவோர் நோயாளிகள் நலன்புரி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## வரி விளம்பரம்

### ஆனந்தம் சீயாக்காய்

சிரசின் தனித்துவத்தை பேணுவதற்கு கைதடி சுதேச வைத்திய சங்கத் தலைவர் சிபார்சுப்படி மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து தயாரிக்கப் பெற்றது. ஆனந்தம் சீயாக்காய் பவுடர், கேட்டு வாங்கி பயன்பெறவும். (8969)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கைபார்த்தல், குறிப்பு எழுதுதல், மற்றும் சகல ஜோதிட ஆலோசனைகளுக்கும் ஜோதிடரை தினசரி 140 செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கருகாமையில் சந்திக்கலாம். (9019)

### மணிக்கூடுகள் தேவை

தரமான மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் வாங்கப்படும். ஆடர்களுக்கு கடிகாரங்கள் திருத்திக் கொடுக்கப்படும் காங்கேசன்-கமலா வாச் வேக்ஸ். உரிமையாளர் தம்பு தேவதாசன் மேல்மாடி(காளி கோவில்முன்பாக)113கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (9025)

### ஜோதிட விஞ்ஞானம்

யுரேனஸ்நெப்ரியூனுடனும், வியாழராகுவும், ஒரேபாகையிலும், சனி செவ்வாய் பார்வைகளாலும் ஆவணி, புரட்டாதியில் தேர்தல் வன்முறைகளும், மோசடிகளும், அரசியல் கொலைகளும், U.N.P தோல்வியால் இனக்கலவரமும் மூளும். ''சத்யா'' கட்டுடை. (9024)

### ஆண்டு · 4

1995 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியில் இருந்து கற்பிக்கப்படும். ஆரம்பம் -06-08-94 சனிக்கிழமை மு. பகல் 8.30 மணி. நாவலர் கல்விக் கழகம், ஆனைப்பந்திசந்தி, யாழ்ப்பாணம். (9023)

### மில்க் வைற் அன்பளிப்பு

மில்க்வைற் பார்சோப் ரூ. 40/- வாங்குவோர்க்குச் சிவனாரும், உமையும், விநாயகனும், வேல்முருகனும் திருவோலக்கங்கொண்ட 15 × 10½ அங்குல அருளொழுகு வண்ணப்படம் அன்பளிப்பு. இருப்பு உள்ளவரையும் மட்டும். ''மில்க்வைற்'' (சி-10040)

### ஒன்றுகூடல்

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை சனி பி.ப. 3.00 மணிக்கு யாழ். நல்லூரில் உள்ள ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


### 5 மீனவர் கொலை

(கொழும்பு)

திருகோணமலைக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிங்கள மீனவர்கள் ஐந்து பேர் நேற்று கொலை செய்யப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

# நினைவு கூருகின்றோம்...

## 05-08-1994...

1987-ம் ஆண்டு முல்லைத்தீவில் முகாமில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

★ **ஜெயா-அம்மான்** (பூபாலசிங்கம் ஜெகதீஸ்வரன் - ஊரெழு-யாழ்)

1989-ம் ஆண்டு மட்டு-ஒட்டமாவடியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெமில்** (ஜெயாத் முகம்மது உசைதீன்-ஒட்டமாவடி-மட்டு)

1990-ம் ஆண்டு கோட்டையில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.அநுரா** (கௌரி தம்பிஐயா- பாக்கியபவனம், ஆரையம்பதி-மட்டு)

**கப்டன் யசோதரன்** (மணியம் கிருஷ்ண தாஸ் - கற்பகபுரம், பம்பைமடு-வவுனியா)

**லெப்.நெல்சன்** (இராசலிங்கம் சிவகெங்காதரன் - ஜெயந்திநகர் -கிளிநொச்சி)

**பிலிப்ஸ்** (கெ. ஜெயச்செல்வம் - கடியவுவீதித்தோட்டம், கொத்மலை-கண்டி)

**கப்டன் விக்னம்** (கந்தையா தவராசா-உடுத்துறை வடக்கு-தாளையடி)

**கப்டன் ஜொனி** (தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்-திருநெல்வேலி வடக்கு-யாழ்)

**கப்டன் கண்ணாடி-கண்ணன்** (கந்தப்பிள்ளை அருட்செல்வன்-கோண்டாவில்-யாழ்)

**கப்டன் றொபின்** (திருஞானசம்பந்தர் கருணாநிதி-தும்பளை-பருத்தித்துறை)

**கப்டன் ஜோன்சன்** (செல்வராஜா பஞ்சமனோகரன்-கோணேஸ்வரன்வீதி-வல்வெட்டித்துறை)

**லெப்.மோகன்** (பாலசுப்பிரமணியம் பாலேந்திரன்-பழையஉடையார் ஒழுங்கை-பருத்தித்துறை)

**லெப்.நிசாந்தன்** (செல்லையா அன்பழகன் -மணற்பகுதி, புத்தூர்கிழக்கு-யாழ்)

**லெப்.புரட்சிமாறன்** (இராசநாயகம் தேவசகாயம்-மானிப்பாய்-யாழ்)

**லெப்.சங்கீதா** (றேணுகா கனகசுந்தரம் - திருநெல்வேலிகிழக்கு-யாழ்)

**2-ம் லெப்.மாதங்கி** (சுமதி மாணிக்கம்-வராத்துப்பளை-பருத்தித்துறை)

**2-ம் லெப்.அலிப்** (வேலுப்பிள்ளை ஜெயபாஸ்கரன் ரேவடி-வல்வெட்டித்துறை)

**2-ம் லெப்.எட்றிச்** (அருணகுலசிங்கம் குமாரகுலசிங்கம்-என்.எம்.வீதி-பருத்தித்துறை)

**2-ம் லெப்.சபேசன்** (செந்தில்வடிவேல் ரஞ்சித்குமார்-காங்கேசன்துறைவீதி-வல்வெட்டித்துறை)

**2-ம் லெப்.நிசாந்தன்** (விசுவலிங்கம் செல்வகுமார்-தும்பளை-பருத்தித்துறை)

**2-ம் லெப்.சரத்பாபு** (கந்தசாமி அகிலேஸ்வரன்-கொக்குவில் கிழக்கு-யாழ்)

**2-ம் லெப். யோகன்-லோசன்** (முத்துலிங்கம் சுரேசலிங்கம் - சுரேசலிங்கம் வீதி-பருத்தித்துறை)

**2-ம் லெப். டயஸ்** (செல்வராசா இராஜேந்திரகுமார் - இருபாலை கிழக்கு - யாழ்)

**ஜேம்ஸ்** (சற்குணராசா எத்திராஜ் - நெடியகாடு-வல்வெட்டித்துறை)

**கெனடி** (வேலுப்பிள்ளை விஜயகுமார் - யாக்கரை, கரவெட்டி கிழக்கு - யாழ்)

**சீலன்-கண்ணன்** (சுப்பிரமணியம் திருவருள்மூர்த்தி - பொலிகண்டி - வல்வெட்டித்துறை)

**அனீபா** (வடிவேலு உதயகாந்தன்- மட்டுவில்வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

**வசிட்டன்** (சடையன் சுந்தரராஜன்- புத்தூர்கிழக்கு-புத்தூர்)

**சந்துரு** (இராசையா திருமாறன் - மண்டான், கரணவாய் மேற்கு - யாழ்)

**பில்லா** (அல்போன்ஸ் யேசுநாயகம்- முள்ளியான், வெற்றிலைக்கேணி - யாழ்)

**விபுலன்-விமலன்** (பிரான்சிஸ் சேவியர் கலிஸ்ரர் யோன்சன் - 8-ம் வட்டாரம்- நெடுந்தீவு மத்தி)

**மாதுரி** (றஞ்சினிதேவி இரத்தினசாமி-கார்த்திக்வீதி, - வல்வெட்டித்துறை)

**கர்ணன்** (நாகரத்தினம் துஷ்யந்தன் - நெடுந்தீவு)

1991 -ம் ஆண்டு ஆனையிறவில் நடைபெற்ற ஆ.க.வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுவரையான இராணுவச் சங்கிலித் தொடர்மீதுபுல்லாவெளிச்சந்தியில்வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ஜமுனா** (சிவஜோதி இராமச்சந்திரன் - திருக்கோயில் - அம்பாறை)

**நிசாம்** (கந்தராசா தர்மராசா- திருக்கோயில் - அம்பாறை)

**லெப். ரஹீம்** (சிவக்கொழுந்து யோகநாதன்-பெரிய புல்லுமலை - மட்டு)

**2-ம் லெப். அலன்** (கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் - ஆறுமுகத்தான் குடியிருப்பு - மட்டு)

**சுதா** (கந்தையா குணநாதன் - கிண்ணியடி, வாழைச்சேனை - மட்டு)

**சுகாலின்** (செல்வராசா ரட்ணகாந்தன் - ஏறாவூர் - மட்டு)

**ஆதித்தன்** (இராமசாமி கஜேந்திரன் - மாமங்க கொலனி, வாழைச்சேனை - மட்டு)

**லெப். லலிதா** (இரஞ்சிதமலர் பாலசுந்தரம் - தம்பலகமம் - திருமலை)

**2-ம் லெப். சீலன்** (வெங்கடாசலம் சிவானந்தன் - தங்குவேலி, மூதூர் - திருமலை)

**2-ம் லெப். சபேசன்** (தர்மரத்தினம் திருத்தணி - கங்குவேலி, மூதூர் - திருமலை)

**கபில்** (சித்திரவேலாயுதம் சசிக்குமார் - திருமால் வீதி, - திருமலை)

**சீனு** (மணியம் சிவராசன் - பாலம்போட்டாறு, தம்பலகமம் - திருமலை)

**நிவேதா** (சிவச்செல்வி சிவபாதம் - 104, யூதா கோயிலடி, லிங்கநகர் - திருமலை)

**லெப். கலைச்செல்வன்** (துரைசிங்கம் ரமேஸ் - வட்டுவாகல் - முல்லைத்தீவு)

**றொமேஸ்** (வடிவேல் முத்துக்குமார்-உடையார்கட்டு - முல்லைத்தீவு)

**ஜோண்** (இராசப்பு விஜயதாசன் - வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

**2-ம் லெப். அசாவேதிரி** (ஜானகி கனகரத்தினம் - கோழியாகுளம், ஓமந்தை - வவுனியா)

**சித்திரன்** (சிவசுந்தரலிங்கம் சிவகாந்தன் - கோயில்குளம் - வவுனியா)

**சங்கீதா** (மேரிகாளிமுத்து - ஆலங்குளம், கனகராயன்குளம் - வவுனியா)

**கப்டன் ராஜாராம்** (கருப்பையா முத்துராசா - வண்ணாங்குளம், அடம்பன் - மன்னார்)

**லெப்.காண்டேல்** (முத்தையா சந்திரகுமார் - பல்லவராயன்கட்டு பூநகரி - மன்னார்.)

**லெப். நிதி** (நடராசா ஜெயராசா - 8ம் வட்டாரம் பேசாலை - மன்னார்.)

**2-ம் லெப். சில்வா** (தங்கவேல் நாகராசா - கண்ணாட்டி, கூழாங்குளம் - மன்னார்.)

**2-ம் லெப். வெற்றிச்செல்வன்** (ஸ்ரனிஸ்லொஸ் நிகிதராஜ் - 6ம் வட்டாரம், பேசாலை - மன்னார்.)

**2-ம் லெப். சதானந்தன்** (சேனாதிராஜா கேதீஸ்வரன் - பொன்னாவெளி - மன்னார்)

**வர்மா** (சோமசுந்தரம் சிவசுதன் - அத்தாய் - பூநகரி)

**கேடில்ஸ்** (சிறில் கிளேற்றன் - புகையிரதநிலைய வீதி - மன்னார்.)

**கப்டன் லக்சி** (தங்கராணி முத்துலிங்கம் - வேம்படி, உடுத்துறை. தாளையடி - யாழ்)

**லெப். நித்தி** (கிருஷ்ணபிள்ளை தவரத்தினம் -கரம்பைக்குறிச்சி, வரணி - கொடிகாமம்.)

**லெப். வாசு** (பொன்னுத்துரை இந்திரகாசன் -வண்ணார்பண்ணை - யாழ்.)

**லெப். மாமன்னன்** (அம்பலவாணர் பரமேஸ்வரன் - களபூமி, காரைநகர் - யாழ்.)

**2-ம்லெப்.நாராயணன்** (நாகமுத்து யோகலிங்கம் புனிதநகர், கற்கோவளம் - பருத்தித்துறை.)

**மதிவாணன்** (தர்மலிங்கம் தனேஸ்வரன் - மல்லாகம் வீதி, சங்கானை - யாழ்.)

**சுரேஸ்** (சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன் - முத்தமிழ் வீதி, கொட்டடி - யாழ்.)

**சதீஸ்குமார்** (தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம்-மாசார்-பளை)

**மது** (மணிவாசகம் வரதராயன் - வட்டுக்கோட்டை கிழக்கு - யாழ்)

**பீற்றர்** (நாணுநாயகர் ஜெயராஜ் - பருத்தித்துறை வீதி - யாழ்)

**கணபதிப்பிள்ளை** (கறுப்பையா குமாரவடிவேல்-பனிச்சையடி- இயக்கச்சி)

**ஜெயசிந்த்- சரண்ராஜ்** (குலசிங்கம் கபிலன்-82. ஏ, சீனியர் ஒழுங்கை, கலட்டி- யாழ்)

**சகுந்தலா** (மேரி எமல்டா வில்லியம் மரியதாஸ்-பண்டத்தரிப்பு - யாழ்)

**கவிதா - கென்சியா** (கெலன் தேவநாயகம் - பெரியவிளான், இளவாலை -யாழ்)

**நிதி** (வசந்தமலர் செல்லத்துரை - கச்சாய்தெற்கு, கொடிகாமம் - யாழ்)

**விஜிதா** (பத்மாதேவி நன்னித்தம்பி - கலைவாணி வீதி, சித்தங்கேணி - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா முப்படைகளினாலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் மொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10039)

### அராலி கண்ணிவெடி

# சிறிலங்கா இராணுவத்திற்கு மீள முடியாத இழப்பு

**1992** ஆகஸ்ட் 7 ஆம் திகதி பிற்பகல் 2 . 15 மணி. அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட விமானப்படைவிமானம் ஒன்று பலாலி விமான தளத்தில் இறங்குகிறது. குடாநாடு மீதான பாரிய இராணுவ நடவடிக்கை திட்டத்துடன் அதனுள் இருந்து இறங்குகிறார் சிறிலங்கா இராணுவத்தின் உயர் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ.

பலாலி விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கிவிட்டு அவர் காரைநகரில் உள்ள கடற்படை தளத்திற்கு செல்கிறார். அங்கு வடபகுதி கடற்படை தளபதி கொமடோர் ஜெயமகா, வடபகுதி இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ன ஆகியோருடன் தனது தாக்குதல் திட்டம் குறித்து கொப்பேகடுவ ஆராயத்தொடங்கினார். திட்டமிடுதல் இரவு 9.30 மணிவரை நீடிக்கின்றது. இதனால் அவர்கள் ஊர்காவற்றுறைக்கு செல்லும் திட்டத்தை மறுநாளுக்கு ஒத்திவைத்தனர்.

ஊர்காவற்துறை சென்றனர்

மறுநாள் காலை 8 : 45 கொப்பேகடுவ, 'விமலரட்ண' ஜெயமகா மற்றும் உயர்படை அதிகாரிகள் காரைநகரிலிருந்து படகு மூலம் ஊர்காவற்துறைநோக்கி புறப்பட்டனர் இறங்கு துறையில் முன்னர் அறிவித்தபடி கேணல் ஆரியரட்ன கேணல் ஸ்ரிபன் ஆகியோர் இவர்களுக்காக காத்திருந்தனர். அங்கு இரு இராணுவ லான்ட்ரோவர் ரக ஜீப் வண்டிகளும் கடற்படைக்கு சொந்தமான ஒரு ஜீப் வண்டியும் இவர்கள் அனைவரையும் ஏற்றிச் செல்வதற்காக வந்திருந்தன. ஒரு ஜீப் வண்டியில் பிரிகேடியர் விஜய விமலரட்ன சாரதி ஆசனத்தில் ஏறிக் கொள்கிறார் அவரின் அருகே கெப்பேகடுவ இடது புறத்தில் அமர்ந்து கொள்கிறார். மற்றைய வாகனத்தை கேணல் ஆரியரட்ன பொறுப்பெடுத்துக்கொண்டார். கடற்படை ஜீப் வண்டியை கடற்படை சாரதி ஒருவர் செலுத்துவதற்கு ஆயத்தமானார். எஞ்சிய அனைவரும் மூன்று ஜீப் வண்டிகளினதும் பின் ஆசனங்களிலும் முன்னேயுள்ள ஆசனங்களிலும் அமர்ந்துகொண்டனர்.

அராலி நோக்கி

சிறிலங்கா படை அதிகாரிகளையும் சுமந்து கொண்டு மூன்று ஜீப் வண்டிகளும் புறப்பட்டன. ஊர்காவற்துறை-மண்டைதீவு பிரதான பாதையில் விரைந்து கொண்டிருந்தன ஜீப் வண்டிகள். அராலி முனையை ஜீப் வண்டிகள் அண்மித்துக் கொண்டிருந்த சமயத்தில் விஜய விமலரட்ன தனது வாகனத்தின் முன்பக்க வெளிச்சங்கள் மூலம் மற்றைய இரு ஜீப் வண்டிகளையும் நிறுத்துமாறு சைகை காட்டினார். வாகனங்கள் மூன்றும் நின்றன. மூன்று வாகனங்கள் இப்படியே சென்றால் மறுகரையிலிருந்து கண்காணித்துக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் முக்கிய அதிகாரிகள் தான் ஜீப்வண்டியில் வருகின்றனர் என்பதை உணர்ந்து எறிகணைத்தாக்குதல் நடத்தலாம் என விமலரட்ன கொப்பேகடுவவிற்கு விளக்கினார். அதை அவரும் ஏற்றுக் கொண்டார்.

ஒரே ஜீப்பில் பயணம்

இதையடுத்து ஒரு வாகனத்தில் செல்வது என முடிவாகியது. மீண்டும் சாரதி ஆசனத்திலேயே விஜயவிமலரட்ன இருந்துகொண்டார். பின்னால் வந்த கடற்படை ஜீப்பிலிருந்த வடபகுதி கடற்படை தளபதி கொமடோர் ஜெயமகா முன் ஆசனத்தில் விமலரட்னவுக்கும் கொப்பேகடுவவிற்கும் இடையில் வந்து அமர்கிறார். கேணல் ஆரியரட்ன, கேணல் ஸ்ரீபன், கேணல் பலிப்பான லெப். லங்காதிலக, லெப். விஜேபுர ஆகியோர் ஜீப்பின் பின் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். விமலரட்னவின் மெய்க்காவலர்சிப்பாய் உபாலி ஜீப்வண்டியின் பின்புறமிதி பலகையில் ஏறிநின்று கொண்டார். இந்நிலையில் ஜீப் வண்டி நிரம்பிவழியவே ஏனையோர்களை அங்கு தங்கிநிற்குமாறு கொப்பேகடுவ பணித்தார். அதேசமயம் அங்குநின்ற அதிகாரி ஒருவரிடமிருந்து தீவக குடாநாட்டு வரைபடத்தையும் பைனாகுளோரையும்தாம் எடுத்துக்கொண்ட கொப்பேகடுவ அராலி முனைக்கு செல்லும் தங்களை அழைத்துவர உலங்கு வானூர்தி ஒன்றிற்கு அறிவிக்கும்படியும் அவ்வதிகாரியிடம் கேட்டுக்கொண்டார். ஜீப் புறப்பட்டது. சில நிமிடங்களில் அராலிமுனையை சென்றடைந்தது. அனைவரும் இறங்கிக்கொண்டனர்.

அராலியில் ஆய்வு

அதிகாரிகள்தாம்முதல்தினம் காரை நகரில் கலந்தாலோசித்த இராணுவத்திட்டத்தை எவ்வாறு ஆரம்பிப்பதுஎன்பது குறித்து அப்பகுதியில் நின்று ஆராய்ந்தனர். நிலத்தோற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது, அராலிமுனையில் இருந்து 'ஒபரேஷன் கௌன்ட்டவுன்' என்ற கொப்பேகடுவவின் குடாநாடுமீதான பாரிய நடவடிக்கையை ஆரம்பிப்பது என ஏகமனதாக அங்குவைத்து முடிவெடுக்கப்பட்டது. மண்டைதீவிலிருந்து ஒரு பாலத்தை அமைத்து நகரப்பகுதியை தாக்கலாம் என விமலரட்ன தனது யோசனையையும் குறிப்பிட்டார். தமது திட்டம் நிறைவேறப்போகின்றது குடாநாடு தம்மிடம் வீழ்ச்சியுறப்போகின்றது என்ற பெரிய திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் அனைவரும் ஜீப்பில் மீண்டும் ஏறுகின்றனர். காலை 10 மணியாகிறது. **UHA**. 8752 என்ற இலக்கமுடைய அந்தபச்சை நிற லான்ட்ரோவர்ரகஜீப் தனது 'இறுதிப் பயணத்தை' ஆரம்பிக்கிறது.

**துஷ்யந்தன்**

அராலியில் இருந்து பிரதான பாதை வழியாக வந்த ஜீப் திடீரென விஜய விமலரட்னவினால் பிரதான பாதையுடன் சமாந்தரமாக செல்லும் குறுகிய பாதைக்கு திசைதிருப்பப்படுகிறது. இவர்கள் ஆரம்பத்தில் இறக்கி விட்டுச்சென்ற ஏனைய படை அதிகாரிகளுக்கு ஜீப் திரும்பி வருவது தெரிகிறது. கொப்பேகடுவவை எதிர்கொள்ள மகிழ்ச்சியுடன் அவர்கள் அனைவரும் தயாராகின்றனர். நிறுத்திவைக்கப்பட்டிருந்த மற்றைய இரு ஜீப் வண்டிகளும் சாரதிகளால் இயக்கச் செய்யப்படுகின்றன. சில அதிகாரிகள் விமலரட்ன ஏன் ஜீப் வண்டியை பிரதானப் பாதையை விட்டு விலக்கி குறுகிய பாதையூடாக வருகிறார் என்று குழம்பி நிற்கின்றனர். கொப்பேகடுவவின் ஜீப் அவர்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் 200 மீற்றர் தூரமே உள்ளது அவர்களை ஜீப் அண்மிக்க.........

வெடித்தது கண்ணிவெடி

அத் தீவை உலுக்கிய படி பாரிய வெடியோசை. மண்ணும் தீயுமாக செந்நிற கரும்புகை பல அடி உயரத்திற்கு எழுகிறது. கூடவே அந்த ஜீப் வண்டியும் எழுகிறது. அதனுடன் கூடவே அந்த சிறிலங்கா இராணுவ அதிகாரிகளும் மேலே செல்கின்றனர். இமைக்கும் பொழுதில் அனைத்தும் நடந்தேறி விட்டது. புகைமண்டலம் அடங்கிய போது ஜீப்பின் பாகங்களே எங்கும் காணப்பட்டன. அதிகாரிகள் நாலாபுறமும் பல அடி தூரத்தில் இரத்தம் தோய இறந்து கிடந்தனர். கண்ணிவெடி தனது பணியை செவ்வனே செய்து முடித்து ஓய்ந்தது. இவர்களை வரவேற்க காத்திருந்த மற்றைய அதிகாரிகளின் கண்முன் நடந்த இந்த சம்பவத்தினால் அவர்கள் திக்பிரமை பிடித்து நின்றனர். சில நிமிடங்களின் பின் தம்மை சுதாகரித்துக் கொண்ட அவர்களில் ஒருவர் உலங்குவானூர்தியை விரைந்துவருமாறு வானொலி செய்தியனுப்பினார். அதன் பின் அவர்கள் சிதறிய ஜீப்பிலிருந்து அதிகாரிகளைத் தேடினர்.

முதலில் அகப்பட்டவர் கொப்பேகடுவ. வெடிப்பு இடம்பெற்ற இடத்திலிருந்து எட்டு அடிக்கு அப்பால் அவர் கிடந்தார். அவரில் உயிர் இருந்தது. வானத்தைப் பார்த்தபடி கிடந்த அவர் சிரமப்பட்டு மூச்சிழுத்தபடி காணப்பட்டார். சிறிது தூரத்திற்கு அப்பால் கொமடோர் ஜெயமகா கிடந்தார். இவருக்கு அருகில் பிரிகேடியர் விமலரட்ன உடல் சிதைந்து கிடந்தார். அவரின் தலையைக் காணவில்லை. இச்சமயத்தில் உலங்கு வானூர்தி வந்து சேர்ந்தது. உயிருடன் காணப்பட்ட கொப்பேகடுவவும், ஜெயமகாவும் முதலில் உலங்கு வானூர்தியில் ஏற்றப்பட்டனர். அதே சமயம் மற்றுமோர் உலங்கு வானூர்தியும் வந்து சேர்ந்தது. குடா நாட்டின் மீது தாக்குதலை ஆரம்பிக்க நிமிடங்களை எண்ணிக் கொண்டிருந்த அதிகாரிகளின் சடலங்கள் எண்ணப்பட்டுபின் அவ்வுலங்கு வானூர்தியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

உலங்கு வானூர்தியில் ஏற்றப்பட்டு சிறிது நேரத்தில் ஜெயமகாவும் உயிரிழந்தார் படுகாயமடைந்த சிப்பாய் உபாலியும் குற்றுயிராக இருந்த கொப்பேகடுவவும் பலாலி தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்

அங்கு இராணுவ வைத்தியர்கள் அளித்த முதலுதவி சிகிச்சையின் பின்னர் அவர்கள் விமானத்தில் ஏற்றி கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர். அவ் வேளையில்கொப்பேகடுவவை இரட்மலானையிலிருந்து ஜெயவர்தனபுர வைத்தியசாலைக்கு எடுத்து செல்ல உலங்கு வானூர்தியை தயாராக வைத்திருக்கும் படி இரத்மலானை விமானப் படைக்கு பலாலியிலிருந்து செய்தி பறந்தது. ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிலையமும் உஷார்படுத்தப்பட்டது. சிகிச்சை பலனளியாத நிலையில் கொப்பேகடுவ அங்கு உயிரிழந்தார்.



புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய லான்ட்ரோவர்

அன்று மாலை சிறிலங்கா வானொலி. அராலியில் நடைபெற்ற கண்ணிவெடி தாக்குதலில் லெப். ஜெனரல் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ண உட்பட ஒன்பது படை அதிகாரிகள் பலியானதாக அறிவித்தது.

அராலியின் பிரதான வீதிக்கு அருகே புதைத்துவைக்கப்பட்டு சிறிலங்காவின் உயர் படைஅதிகாரிளைகூண்டோடு அழித்த அந்தக் கண்ணிவெடி தீவகப் பகுதி அரசபடைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற அறிவிப்பு பொய்யானது என்பதை உலகிற்கு அறிவித்ததோடு சிறிலங்கா இராணுவத்திற்கு மீள முடியாத பெரும் பின்னடைவையும் கொடுத்தது.

இதேவேளை எதிரி தனது படையெடுப்பை ஆரம்பிக்க நிமிடங்களை எண்ணிக்கொண்டிருக்கையில் நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு ஒருநாள் முன்பாக இத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியமை விடுதலைப்புலிகள் உலகில் தற்போதுள்ள கெரில்லா அமைப்புகளிடையே செயல்வல்லமை பொருந்தியதாக உள்ளது என சர்வதேச இராணுவ ஆய்வாளர்களின் கூற்றை மீண்டும் ஒரு முறை நிருபித்தது.



கொப்பேகடுவ

இந்தவகையில் இக்கண்ணிவெடித்தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொள்ள காரணமான விடுதலைப்புலிகளுக்குத் தலைவர் பிரபாகரன் பாராட்டி விசேட பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தது பொருத்தமானதே.

தீவகப் பகுதிக்குள் ஊடுருவி நிலக்கண்ணியை வைத்த விசேட இராணுவ வேவுப் பிரிவை சேர்ந்த நான்கு போராளிகளுக்கும் அவர்களுக்கு பாதுகாப்பு குழுவாக சென்ற மேலும் ஐவருக்கும் இந் நுட்பம் வாய்ந்த கண்ணிவெடியை தயாரித்த போராளிக்கும் புதைக்கும் இடத்தை நுட்பமாக தெரிவு செய்த போராளிக்கும் என 11 போராளிகள் சம்பவம் நடைபெற்று ஒரு மாதத்தின் பின்னர் தலைவர் பிரபாகரனிடமிருந்து செயல் திறமைக்காக பரிசில்கள் பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள் தென்னிலங்கை பத்திரிகைகளிலும் மீள் பிரசுரமாகின. அப்போது அராலி கண்ணி வெடியின் தாக்கம் எத்தகையது என்பதை அங்குள்ளவர்களும் புரிந்து கொண்டனர்.

## அந்த...சப்தம்!

ஒரு சப்தம்......
ஒரேயொரு சப்தம்
பூமி, வானம்
அதிர்ந்தன......
முகில்களை கலைய
வைத்த
அதிர்வு......
ஒன்பது அரக்கர்
ஒரே நிமிஷத்தில்
உயிர்விட்டனர்.
உலகிற்கு
உன்னதமான செய்தி
சொன்ன
நிகழ்வு......
இந்த மண்
புளகத்தில் புல்லரித்துக்
கொண்டது.
அந்த சப்தம்
இந்த தேசத்தின்
பூபாளமானது......

**-மானிலா!**

# தேர்தலில் வெற்றியை தீர்மானிக்கும் புதிய வாக்காளர்கள்

நிமலராஜன்

சிறிலங்காவின் தேர்தல் வரலாற்றில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் வாக்காளர் பட்டியலில் புதிதாக இடம்பிடிப்பவர்களின் செல்வாக்கு கணிசமாக இருந்து வருவது கண்கூடு. இம்முறையும் சுமார் இருபத்துநான்கு இலட்சம் வாக்காளர்கள் புதிதாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

புதிதாக வாக்கள்க்கும் தகுதி பெற்றுள்ள இவர்களில் சுமார் அரைப் பங்கினரையாவது கவர்ந்து இழுக்கக் கூடிய சக்தி பெற்ற கட்சியின் ஆதிக்கத்தின் கீழேயே பத்தாவது பாராளுமன்றம் அமையலாம். இதன் காரணமாக இப் புதிய வாக்காளர்களின் கவனத்தை ஈர்ப்பதில் இரு பெரும் கட்சிகளும் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டிருக்கின்றன. தேர்தல் விஞ்ஞாபனம் முதல் தேர்தல் பிரசாரத்திற்கான வியூகம்வரை பல்வேறு நடவடிக்கைகளிலும் இதனை இரு பிரதான கட்சிகளும் கவனத்தில் கொண்டிருப்பது தற்போது வெளிப்படையாகி வருகின்றது.

## இளைஞர்களை கவர்ந்திழுக்க

ஒவ்வொரு இளைஞர்களுக்கும் சுயதொழில் பயிற்சி வழங்கப்படும் என்றும், தொழில் பயிற்சி வழங்கும் வாய்ப்பு கிட்டுவதற்கு முன்பாக மாதாந்தம் சுமார் 1200 ரூபா வரையில் வழங்கப்படும் என்றும் இதற்காக சுமார் ஆயிரம் கோடி ரூபாவைத் திறைசேரி ஒதுக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஐ. தே. க- தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துக் கொண்டுள்ளது.

இளைஞர் சேவைகள் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு மாகாணத்தில் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும் என்றும், இதற்காக ஆறு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 6000 தொழில் நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்காக இருபது கோடி ரூபா ஒதுக்கப்படும் என்றும் ஐ. தே. க. மேலும் கூறியுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களின் நலன்கருதி மாபொல நிதியம் மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும், இதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் 2000 ரூபாவுக்கு குறையாக உபகாரத் திட்ட வகை செய்யப்படும் என்றும் ஒரு தொகை பணத்தை அடிப்படையாகக் கொண்டு ''இளைஞர் வளச் சான்றிதழ்'' வழங்கல் ஆரம்பிக்கப்படும் என்றும், இதற்கான பணத் தொகை நிர்ணயம் செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக ஒரு இளைஞர் வங்கி அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி இதற்கு ஒருபடி மேலே போய் தனது வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளது. வேலையற்ற இளைஞர்களுக்கு மாதாந்தம் 2000 ரூபா வழங்கப்படும் என்றும், தொழில் கிடைக்கும் வரை இலவச உணவு பெறும் பொருட்டு ரூபா 1500 வழங்கப்படும் என்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி கூறி வருகின்றது.

அத்துடன் சகல இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டம் தம் வசம் இருக்கிறது என்பதும், குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு மாதாந்தம் 1500 ரூபாவரையில் பெறுமதியுடைய உணவுப் பொருட்களை தமது ஆட்சி வழங்கும் என்பதும் பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தல் பிரசாரத்தில் கூறும் முக்கிய விடயமாகியுள்ளது,

அத்துடன் சிங்கள இளைஞர்களை அநியாயமாகப் பலிகொள்ளும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கும் இளைஞர்களை வாட்டி வதைக்கும் பயம், பீதி, என்பவற்றை முற்றாக ஒழித்துவிட திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் பொது ஜன ஐக்கிய முன்னணி கூறிவருகிறது

மேலும் காணாமற்போன இளைஞர்கள்- தடுப்புக்காவலில் காரணமின்றி வாடுவோர்-மற்றும் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டவர்கள்-எலும்புக் கூடுகளாய்த் தானும் மீட்கப்படாது காணமற்போனோர் என பல தரப்பட்டவர்கள் தொடர்பாகவும் பூரண விசாரணை மேற்கொள்ளப்படும் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்குகளை பிரிக்க

இதே வேளை இளைஞர்களின் வாக்குகளை பிரிக்கும் நோக்குடன் ஜே.வி.பியின் சில உறுப்பினர்களும் இலங்கை முற்போக்கு முன்னணி, வெகு ஜன முன்னணி போன்ற கட்சிகளை தேர்தல் களத்தில் குதிக்க செய்வதன் மூலம் இளைஞர்களின் வாக்குகளை பிரித்து தொடர்ந்து தமது ஆட்சியை நீடித்துக் கொள்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி தந்திர உபாயத்தை மேற்கொண்டுள்ளது.

ஆகக் குறைந்தது பத்து லட்சம் இளைஞர் வாக்குகளை எதிரணிக்கு கிடைக்காமல் மேற்கூறிய இளைஞர் அணிகளுக்கு கிடைக்கச் செய்வதால் தனது வெற்றியை ஊர்ஜிதம் செய்ய முடியும் என்பதே ஐக்கிய தேசிய கட்சியின் திட்டமாகும்.

இதே வேளை பொது ஜன ஐக்கிய முன்னணி தனது வேட்பாளர் பட்டியலில் முப்பது சதவிகிதத்திற்கும் அதிகமான இளைஞர்களுக்கு இட ஒதுக்கீட்டை செய்து கொடுத்துள்ளது. கணிசமான ஆதரவை பெறக்கூடியவர்களுக்கு முக்கிய அமைச்சு பதவிகளை தமது அரசாங்கம் ஆட்சி அமைக்கும் சமயத்தில் வழங்கும் என தெரிவித்துள்ளது.

## இனவாதப்போக்கில்

இவ்வாறு இரு பிரதான கட்சிகளும் புதுவாக்காளர்களை கவர புதுப் புது தந்திரங்களை கையாளும் அதே நேரத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகள் இனவாதத்தை- இனவெறியை தமது மூலதனமாக்க முற்பட்டுள்ளன. வாக்குகளைக் கவருவதற்காக இளைஞர்களை தன் வசப் படுத்தி உணர்ச்சி ஊட்டுவதற்காக இன்று இனவெறியை மக்கள் ஐக்கிய முன்னணி கக்கி வருகிறது.

பண்டா - செல்வா ஒப்பந்தம், செல்வா - டட்லி ஒப்பந்தம் ஆகிய இரு ஒப்பந்தத்தை அன்று மனப்பூர்மாக ஏற்று அதனைச் செயலாக்க அப்போதையஅரசுகளுக்குஒத்துழைப்பு தருவதாக உறுதி அளித்தது இக்கட்சி என்பதும், அதன் முன்னாள தலைவரும் பழம் பெரும் இடதுசாரி சிந்தனையாளர்களில் ஒருவரான பிலிப குணவர்த்தனாவின் புதல்வர்தான் இன்றைய அதன் தலைவர் தினேஷ் குணவர்த்தனா என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு விடயமாகும்

எந்தக் கட்சி என்னென்ன விதமான யுக்திகளைக் கையாளுகின்ற போதும் இளைஞர்களைத் தம்வசப் படுத்துவது என்பதே இப்போது அவர்களின் முக்கிய குறியாக இருப்பது மட்டும் வெளிப்படை. பத்தாவது பாராளுமன்றத்தின் திறவுகோல் புதிய வாக்காளர்களான இளைஞர்களின் கைகளில் இப்போதுஇருப்பதாக வேட்பாளர் பலரும் கருதுகின்றனர். எதிர்காலத்தில்பாராளுமன்றபொதுத் தேர்தலில் பங்குபற்றும் சகல கட்சிகளும் மாவட்ட அடிப்படையில் நாற்பது சதவிகித இடங்களை இளைஞர்களுக்கு ஒதுக்கீடு செய்வதை கட்டாயமாக்கும் வகையில் அரசியலமைப்புக்கு திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று ஐ. தே. க. பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர வெளிப்படையாகக் கூறியுள்ளார். இது இளைஞர் சக்தியின் முக்கியத்தை உணர்த்தும் ஒரு கூற்று எனலாம்.

## வெற்றியை தீர்மானிப்பவர்கள்

முதலாவது பொதுத் தேர்தல் 1947-ல் இடம்பெற்ற போது சுமார் 30, 48, 145 வாக்காளர் இருந்தனர் ஆனால் 1956க்கு இடையேயில் வாக்காளர் தொகை10 ,46,204ஆல்அதிகரித்தது 1956-ல் சுமார்6,81,381வாக்கு மேலதிகமாக பெற்ற நிலையில் சுதந்திரக் கட்சி வெற்றியீட்டியது. முதல் ஆட்சி மாற்றம் சாத்தியமானது. இதற்கு புதிய வாக்குகளில் 10, 46,204 வாக்குகளின் அரைப் பங்குக்கு மேலான வாக்கு சுதந்திரக் கட்சிக்கு கிடைத்ததே காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். 1965-ம் ஆண்டிலும், 1970-ம் ஆண்டிலும் வாக்களிக்கப்பட்ட முறையை பரிசீலனைக்கு உட்படுத்தும்போது வாக்காளர் பட்டியலின் புது வாக்காளர் வரவுகள் தேர்தல் முடிவுகளில் தாக்கம் ஏற்படுத்தியிருப்பதை காண முடியும். இதேநிலை 1977 தேர்தலிலும் காணப்பட்டுள்ளது. எனினும் 1982 - 1988இலும் ஆட்சி மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

தற்போது புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் இருபது லட்சத்திற்கும் அதிகம். இவர்களில் அநேகமானோர் அல்லது ஏறத்தாழ அனைவரும் எதிரணிக் கட்சியின் ஆட்சி எப்படி அமைந்திருக்கும் என்பதையே அறியாதவர்கள். இன்றைய ஐ.தே. க. ஆட்சியில் அமரும் போது சுமார் ஐந்து வயதுப் பருவத்தில் உள்ள ஒருவர் தற்போது 22 வயதுடைய இளைஞர். இவருக்கு எதிரணிக் கட்சியின் ஆட்சியில் நீண்ட கியூக்களில் கால் கடுக்க நின்ற அனுபவம் எதுவும் இருக்காது.

எதிர்க்கட்சியின் ஆட்சி எப்படி இருக்கும் என்பதை அறியும் ஆவல் மிகுந்திருக்கும் இவர்களிடம் நீண்ட 'கியூ'க்கள் பற்றி ஐ. தே. க. காட்டும் பூச்சாண்டி எதுவும் எடுபடுவதாக இல்லை. இதனாலேயே பொது ஜன ஐக்கிய முன்னணியின் மீது இவர்களின் அலை கொஞ்சம் வேகமாக வீசுகின்றது. இதனால் ஆத்திரம் கொண்ட ஐ. தே, கவினர் பொது ஜன ஐக்கிய முன்னணி மீது வன்முறைகளை உத்தி யோகபூர்வமற்ற முறையில் மேற்கொண்டு வருவதுடன் சில அமைச்சர்கள் இதற்கு தலைமை தாங்கி வருவதும் பின் நீதிமன்றத்தில் ஆஜராகிசட்டபூர்வமான பிணையில் செல்வதும் வழக்கமாகிவிட்டது.

## ஐ. தே. க. வாக்கு வங்கியின் சரிவு

1977க்கு பின்னர் பல தேர்தல்கள் இடம்பெற்றுள்ளபோதும் கூட ஆட்சி மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1977ஆம் ஆண்டு தேர்தலின் 49 52 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்ற ஐ. தே. க. 1982இல் 52.91 ஐயும், 1983இல் 54.58 ஐயும் வாக்களிப்பில் தக்கவைத்துக் கொண்டது.

எனினும் 1983க்குப் பின்னர் இவ் விகிதாசாரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. 1988இல் (ஜனாதிபதித் தேர்தல்) 50.42 லிருந்து 1989(பாராளுமன்றத்தேர்தல் ) 50. 41 ஆகவும் 1991இல் (மாகாணசபைத்தேர்தல்) 51. 02 ஆகவும் 1993இல் (மாகாண சபை தேர்தல்)இது 46. 86 ஆக ஐ. தே.க வின் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அடிப்படையில் ஐ. தே க. நுவரெலியா 26. 22, இரத்தினபுரி 3. 33 ஆக ஆகிய மாவட்டங்களில் மட்டுமே அதிகரிப்பு விகிதத்தை கொண்டிருந்த போதும் ஏனைய இருபது தேர்தல் மாவட்டங்களிலும் ஐ.தே.க வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆகக்கூடிய வீழ்ச்சியாக கொழும்பு 10 .14 ஏற்பட்டுள்ளதும், மொனராகலையில் 0.37 என்ற ஆகக் குறைந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை இறுதியாக நடைபெற்ற இரு மாகாணசபை தேர்நலை கொண்டு அனுமானிக்க கூடியதாக இருந்தது.

எனவே தொடர்ந்தும் இவ் வீழ்ச்சி விகிதம் அதிகரிக்கும் போக்கு காணப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இளைஞர் பலர்பொது ஜனஐக்கியமுன்னணி தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுவருவதையும் இன்று ஆட்சி மாற்றத்தை பெரும்பாலும் விரும்புபவர்கள் இளைஞர்கள்தான் என்பதும் இதன்மூலம் தெளிவாக உணர கூடியதாக அமைகின்றது.

இருந்த போதும் புதிதாக வாக்களிக்கும் தகுதி பெற்றுக்கொண்டவர்களில் கணிசமான பகுதியினர் மலையகத் தமிழ் மக்கள் ஆவர். இவர்களுக்கு வாக்குப் பெற்று தந்தது தாமே என மகுடத்தைசூடிக்கொண்டு இருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமான் இன்றும் ஐ.தே.க உறவு கொண்டு இருப்பதினால் இப் புதிய வாக்கும் ஆட்சிமாற்றத்திற்கு இடையூறாக அமையலாம் என்றும் கூட சில தரப்புகளால் விவாதிக்கப்படுகிறது. எது எப்படியாயினும் 16ஆம் திகதி இதற்கான பதிலைத் தரும்.

## சிலந்தி மொழி

எட்டுக்கால் சிலந்திக்கும் ஒரு மொழி உண்டு. சூழல் மாற்றங்களையும் உணர்வுகளையும் வெளிக்காட்ட அது இதனைப் பயன்படுத்துகின்றது. தனது வலையில் ஒரு ஈ மாட்டிக் கொண்டு விட்டால் தாய்ச் சிலந்தி தன் குஞ்சுகளுக்கு உணவு கிடைத்ததை அறிவிக்கவும், ஆபத்து தோன்றி விட்டதை அறிவிக்கவும் தனது வலையை அசைப்பதன் மூலம் தகவலைப் பரிமாறுகிறது.

குஞ்சுகள் ஆகாரத்திற்காக தன்னிடம் வரவேண்டுமானால் வலைமெதுவாக அசைக்கப்படும். ஆபத்தைஅறிவிக்க வலைபலமாக அசைக்கப்படும். குஞ்சுகள் வலையைப் பலமாக ஆட்டினால் உடனே குஞ்சுகளின் உதவிக்கு தாய்ச் சிலந்தி கிளம்பிவிடும். மற்றொரு பெரிய சிலந்தி வலைக்குள் விழுந்துவிட்டால் அவ்வலைக்குரிய சிலந்தி அதை வரவேற்கும், ஆனால் முறைகேடாக நடந்தாலோ நடப்பதே வேறு. சிலந்தியானது அதன் வகை உயிரினங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்த அறிவு படைத்தவை என்பதையும் உயிரியல் நிபுணர்கள்கண்டுபிடித்துள்ளனர்.

# அமெரிக்கா மீண்டும் ஐ. நா. சார்பாக படையெடுக்கப் போகின்றது

**பாலகுமாரன்**

மாறிவரும் புதிய உலக நிலைமைகளில் அமெரிக்கா வகிக்கும் இடமானது எத்தகையதோர் விசித்திரமான சூழலை தோற்றுவிக்கின்றது என்பதற்கு கெய்ற்றி தொடர்பாக கடந்த ஞாயிறன்று ஐ. நாவின் பாதுகாப்புச்சபை மேற்கொண்ட தீர்மானமே போதிய சான்றாகிறது. 1990 ஆம் ஆண்டிற்கு முன்னதாக தனது சொந்த நலனுக்காக லத்தீன் அமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு பலதடவைகளில் படை அனுப்பி ஆக்கிரமிப்புகள் செய்தும் சருவாதிகார ஆட்சியாளரை காப்பாற்றி வந்தஅமெரிக்கா, இன்று வரிந்துள்ள பாத்திரம் என்ன? ஐ. நாவின் அனுமதியோடு அதன் அதிகாரத்தோடு இப்போது இன்னொரு படையெடுப்பினை அமெரிக்கா மேற்கொள்கின்றது. இந்தத் தடவை விரும்பியோ விரும்பாமலோ மக்களால் தெரிவு செய்யப்பட்ட கெய்ற்றியின் ஜனாதிபதியான அரிஸ்டீட்டை பதவிவிலக்கிய இராணுவ ஆட்சியாளரை பதவி நீக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவின் பின்புறத்தில்-அமெரிக்கத் தயவில் - அதன் செல்வாக்கிற்குட்பட்டிருந்தகெய்ற்றிய கொடுங்கோன்மை டுவாலியர் குடும்ப ஆட்சி வழிவந்த தற்போதைய ஆட்சியாளர் இப்போது அமெரிக்காவிற்கே சவால் விடும் நிலை தோன்றியுள்ளது. இப்போது பாதுகாப்புச் சபையின் முடிவானது கெய்ற்றியின் இராணுவ ஆட்சியாளரான லெப். ஜெனரல் ராவுல் செட்ராசை பதவியிலிருந்து அகற்றி அரிஸ்ட்டீட் பாதிரியாரை பதவியில் அமர்த்தவும் சனநாயக மரபைப் பேணவும் தேவையான சகல வழிகளையும் பயன்படுத்த அமெரிக்கத் தலைமையிலான பன்னாட்டுப் படையணியொன்றிற்கு பூரண அதிகாரம் வழங்கிவிட்டது. காலக்கெடு எதுவும் விதிக்காதபடியால் அமெரிக்கா தனது விருப்பப்படி படையெடுப்பு கால அட்டவணையை தயாரிக்க முடியும். ஆனால் ஏற்கனவே திகதி குறிக்கப்படாத நிலையில் கெய்ற்றி மீது படையெடுக்க தேவையான சகல ஆயத்தங்களும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. இருந்த போதும் இன்னும் சில தினங்கள் செட்ராசுக்கு தாமாக பதவிவிலக அவகாசம் கொடுபடலாம் என்று கருதப்படுகிறது.

கெய்ற்றி மீதான படையெடுப்பிற்கான கடைசி ஒத்திகையையும் இப்போது பார்த்தாகிவிட்டது கெய்ற்றியின் தலைநகரான போட் ஒ பிரின்ஸ் (Port - Au - Prince) இலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பகாமாத் தீவில் மரின்ஸ் (Marines) எனப்படும் கடற்படை முன்னணி அதிரடிப்படை வீரர்களும் அமெரிக்க இராணுவத்தின் 82 ஆவது வான் வெளி தாக்குதல் படைப்பிரிவின் வீரர்களும் படையெடுப்பிற்கான சகல பணிகளையும் முடித்துவிட்டு உத்தரவிற்காக காத்திருக்கிறார்கள், 2500க்கு மேற்பட்ட வீரர்கள் 30க்கு மேற்பட்ட தாக்குதல் உலங்கு வானூர்திகள், கவசவாகனங்கள், கனரக பீரங்கிகள் என பல தரப்பட்ட கனரக தளபாடங்களோடு கடலில் காத்திருக்கின்றனர். அதுபோலவே அமெரிக்காவின் பல விமானப்படை தளங்களில் 82 ஆவது, 101-வது இராணுவ வான்வெளி தாக்குதல் இராணுவ வீரர்கள் தயாராக உள்ளனர். படையெடுப்பு திட்டத்தின்படி கடற்படையின் (Seals) சீல்ஸ் என அழைக்கப்படும் முன்னணி வீரர்கள் கெய்ற்றிக்கு இரகசியமாக சென்று நிலைமைகள் சீர் என அறிவித்தவுடன் இப்பரசூட் படைவீரர்கள் கெய்ற்றியின் உள் இறக்க வேண்டும். இவ்வாறாக இராணுவத்தின் ரேஞ்சர்ஸ் (Ranger) கடற்படையின் சீலஸ் (Seals)மரீன்ஸ் (Marines) எனப்படும் அதிரடிப் படை வீரர்கள் கிளின்டன் உத்தரவை எதிர்பார்த்து தயார் நிலையில் உள்ளனர். அது போலவே 14 க்கு மேற்பட்ட கடற்படைக் கப்பல் தொகுதியொன்று உத்தரவைக்காத்து கெய்ற்றிக்கு சற்றுத் தள்ளி கடலில் தரித்துள்ளது. கெய்ற்றியில் முதலில் கைப்பற்ற வேண்டிய இடங்கள் தீர்மானித்தாகி விட்டது.

மொத்தமாக 15,000 - 20 000 க்கு இடைப்பட்ட வீரர்கள் தொடக்கத்தில் தேவைப்படும் என அமெரிக்கத்தரப்பால் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆறுமாத காலம் தங்கியிருக்க இவர்கட்கு நேரிடலாம் என்றும் கருதப்படுகிறது. கெய்ற்றியில் பெரிதாக எதிர்ப்பு ஏதும் இருக்காது என்றே பொதுவில் கருதப்படுகிறது. ஏனென்றால் கெய்ற்றிய இராணுவம் என்பது 7500 வீரர்கள் மட்டும் கொண்டது.

> “கெய்ற்றி மீது படை எடுப்பதற்கான சகல பணிகளையும் செய்து முடித்த பின்னரே அமெரிக்கா ஐ. நாவின் அங்கீகாரத்தை பெற விண்ணப்பித்தது. ஐ. நாவின் தீர்மானத்திற்கு முன்னரே அமெரிக்க அதிரடிப்படை வீரர்களை இராணுவத்தின் றேஞ்சர்ஸ் (Rangers) கடற்படையின் சீல்ஸ் (Seals) மரின்ஸ் (Marines) போன்றோர் படையெடுப்பிற்கான கடைசி ஒத்திகையையும் பார்த்து முடித்துவிட்டார்கள்.”

ஒரு சில கவசவாகனங்களே அவர்களிடம் உள்ளது. இவற்றினை சமாளிப்பது அமெரிக்காவிற்கு பெருத்த சிரமமாக இராது ஏனென்றால் கெய்ற்றிய மக்கள் இந்த இராணுவத்திற்கு உதவப் போவதில்லை என்பதால் தொடரும் கெரில்லா போர் ஒன்று நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. என்றாலும் காலம் காலமாக ஆளும் வருக்கமான அளவிட முடியாத செல்வம் தீட்டிய கெய்ற்றிய ஆளும் வருக்கமும் இராணுவமும் கெய்ற்றியில் இலகுவில் அமைதியை கொண்டுவர பெரும்தடையாகவே இருப்பர். அத்தோடு பெரும் அடக்கு முறையில் சேரிப்புற மக்களாக கல்விஅறிவு அற்ற. மந்திரதந்திர வித்தைகள் ஒட்டிய, மூடத்தனமுள்ள சமூகப் பழக்க வழக்கங்கள் கொண்ட மக்களிடையே சனநாயக வழிமுறையை புகுத்துவது என்பது இலேசான பணியுமல்ல. எனவே தான் கெய்ற்றியில் பிரச்சினை அரசியல் ரீதியாக, போவது இலகு, வருவது கடினம் என்பதே யதார்த்த நிலையென்பதாலேயே கிளின்டன் தன்னிச்சையாக படையெடுப்பினை நிகழ்த்தாமல் ஐ. நாவின் அதிகாரத்தை பெறுவதில் குறியாக இருந்தார் என்பது தெளிவான செய்தி. அதுமட்டுமல்ல பெயரளவிற்காயினும் பன்னாட்டுப் படையணியாக தனது படையணி இருக்க வேண்டும் என்பதோடு படையெடுப்பிற்கான அமைதிப்படைக்கு 6000 பேர் கொண்ட அமைதிப்படை அணியை ஐ. நா. திரட்டி அனுப்ப வேண்டும் என்றும் ஐ. நா. மூலம் தீர்மானத்தை நிறைவேற்றி தன்னை தற்காத்துக் கொள்கிறார் கிளின்டன் என்பதும் தெளிவு,

இவ்வளவு செய்தபோதும் பொதுவாக படையெடுப்பிற்கான ஆதரவு என்பது கிடைக்கவில்லை. பாதுகாப்புச் சபையிலேயே தொடக்கத்தில் பலத்த தயக்கம் காட்டப்பட்டதாகவும் பின்னர் 3வருடங்களாக அமெரிக்காவிலேயே தங்கியிருக்கும் சனாதிபதி அரிஸ்டீட்டின் கடிதம் ஒன்றின் பின்னரே பாதுகாப்புச் சபையும் முடிவொன்றினை எடுத்ததாக தெரிகின்றது. சனாதிபதி அரிஸ்ட்டீட்டை பொறுத்த வரையில் அவர் படை எடுப்பினை விரும்பாத போதும் தற்போது வேறுவழியின்றி படையெடுப்பு என நேரடியாக எழுதாவிட்டாலும் மறைபொருள் “தீவிரமான வேகமான நடவடிக்கை எடுக்கவேண்டிய காலமிது”, என ஐ. நாவுக்கு எழுத நேரிட்டது அமெரிக்காவைப் பொறுத்த வரையில் நுணலும் தன் வாயால் கெடும் என்பது போலவே நிலையுள்ளது. மனித உரிமைகள், சனநாயகம் என்கிற கத்தி இருபக்கமும் கூர்மையானது என்பதே இன்று அமெரிக்கா கற்றபாடம். ஏனைய தனக்கு பகையான மனித உரிமை மீறும் நாடுகளை கடுமையாக தண்டித்தும் தடைகள் விதித்தும் செயற்படும் அமெரிக்கா கெய்ற்றி விவகாரத்தில் என்ன செய்தது என்கிற தார்மீகக் கேள்வியின் வெப்பம் தாங்க முடியாமல் கிளின்டன் கெய்ற்றி தொடர்பான தனது போக்கினை மாற்ற நேர்ந்தது.

இவ்வளவு காலமும் அனுமதி மறுக்கப்பட்டு வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்ட கெய்ற்றி அகதிகளை இப்போது அமெரிக்கா ஏற்றுக் கொள்ள சென்ற மே மாதத் தொடக்கத்தில் தீர்மானித்தது. அதைத் தொடர்ந்து பெருமளவில் கெய்ற்றியில் துயரால் வாடிய மக்கள் கொந்தளிக்கும் அலைகடலில் சிறிய படகுகளில் ஏறி சாரை சாரையாக கிளம்பினர். இவ்வாறு கிளம்பிய பலர் கடலுக்கு இரையாகினர். இதனால் இம் மக்களை நடுக்கடலிலே மீட்க வேண்டிய நிலையேற்பட்டது. கப்பலில் வைத்தே இம் மக்கள் விசாரிக்கப்பட்டு காலதாமதமின்றி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. நாளாந்தம் சராசரி 1500 - 2000 க்கு இடைப்பட்ட மக்களை இவ்வாறு கடலில் மீட்க நேர்ந்தது. இவ் அகதி மக்களை ஏற்குமாறு ஏனைய கரிபியன் தீவுப்பகுதி நாடுகளை அமெரிக்கா வேண்டிய போதும் அதற்கு சாதகமான பதில் கிட்டவில்லை. தாம் படகேறிப் போவது அரிஸ்டீட் பாதிரியாரை பதவியிலமர்த்த உதவக் கூடும் என்கிற எண்ணமும் மக்களிடையே தோன்றியதால் உயிரைப் பணயம் வைத்து பெருமளவில் இவர்கள் பயணிக்கத் தொடங்கவே இது பாரிய சிக்கலை அமெரிக்காவிற்கு தோற்றுவித்தது.

எனவே அமெரிக்கா தீர்க்கமான முடிவொன்றை மேற்கொண்டது இத் தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றிய போதும் வழமைபோல் இத்தகைய தீர்மானங்களை ஆதரிக்காத சீனா, வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத போதும் லத்தீன் அமெரிக்க நாடான பிறேசிலும் தனது எதிர்ப்பை வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாததன் மூலம் தெரிவித்தது அமெரிக்காவிற்கு ஏமாற்றமாகி விட்டது. அத்தோடு மெக்சிக்கோ, வெனிசூலா, உருகுவே என பல தென்னமெரிக்க நாடுகளும் படையெடுப்பினை தாம் எதிர்ப்பதாக இப்போது கூறத் தொடங்குகின்றன. லத்தீன் அமெரிக்கப்பகுதியில் எவ்வகையான தலையீடுகளும் இனிமேல் இருக்கக் கூடாது என்பது இவர்கள் பலரின் கருத்து. கியூபாவும் கடுமையாக எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இது வரை ஆர்ஜென்டீனா, கொண்டூராஸ் என்பனவே ஆதரவு தெரிவிக்கும் தென்னமெரிக்க நாடுகளாகும். இவற்றைவிட ஐ. நாவின் படையெடுப்பு அணிக்கு படைகளை அனுப்ப மேற்குலகில் கனடா மட்டுமே இப்போது முன்வந்துள்ளது. எனினும் பொதுவாக இத்தகைய அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பு ஒரு முன்னுதாரணத்தின் தொடக்கமாகிவிடும் என பல நாடுகளுக்கும் அச்சுறுத்துவதாக தெரிகின்றது. அமெரிக்கா மீண்டும் ஒரு புது வடிவத்தில் தனது மேலாண்மையை காட்ட வாய்ப்பளிக்கக் கூடாது என்பதே அமெரிக்காவின் முன்னைய வரலாறு இவர்கட்கு கற்பிக்கும் பாடமாகி விட்டது.

ஐ. நாவை பொறுத்தவரை இப்போது அமைதிப்படைப் பணிக்கே போர் வீரர்களை திரட்ட முடியாத நிலை. ஏற்கனவே பொசுனியாவில் நீண்ட காலம் தங்கியிருக்கும் பிரான்சியப் படை வெளியேற விரும்புகிறது. ருவாண்டாவிற்கு அனுப்ப வேண்டிய 5500 பேர் கொண்ட அமைதிப் படைக்கே ஆட்களை இன்னும் பெறமுடியவில்லை. இந்நிலையில் கெய்ற்றிக்கு அனுப்ப வேண்டிய 6000 போர் வீரர்களை எவ்வாறு ஐ. நா. திரட்டப்போகின்றது என்பதே பெருத்த கேள்விக்குறியாக இன்றுள்ளது. இத்தகைய நிலையில் அமெரிக்க மக்களின் மனநிலையே எத்தகையபணியாக இருந்தாலும் ஒரு அமெரிக்க படை வீரரைத்தன்னும் இழக்கும் நிலையில் இல்லையென கூறப்படுகின்றது. சோமாலியாவில் கசப்பான பாடங்கள் அவர்களை பின் தொடர்கின்றன. அமெரிக்கா தன்னிச்சையாக கெய்ற்றிமீது படையெடுப்பதை 75 விழுக்காடு அமெரிக்க மக்கள் விரும்பவில்லையென்பது மாதிரி கணிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. அதே சமயம் கிளிண்டனை ஒரு பயங்கரக் கனவொன்று தொடர்வது- போல் கெய்ற்றியின் இன்றைய அவல நிலை தொடர்வதாக பெரும் முடிச்சுகள் போடப்பட்ட புதிர் ஒன்றினுள் அவரை தள்ளிவிட்டிருப்பதாக ஆய்வாளர் ஒருவர் அண்மையில் வருணித்தார்.

இவ்வாறு பல்வேறு குழப்ப நிலைகள் தொடரும் இன்றைய நிலையில் கெய்ற்றியின் இராணுவ ஆட்சியாளர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. வீரப்பான வெற்று வீரவசனங்களை பேசும் அவர்கள் படையெடுப்பை எதிர்கொள்ள எத்தகைய தயார் நிலையிலும் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் அதே சமயம் அரிஸ்டீட் ஆதரவாளர்கள் மீது அமெரிக்காவுக்கு அகதிகளாக போவோர் மீது மோசமான அடக்கு முறைகளை கட்டவிழ்த்துள்ளது. அண்மைக்காலமாக பலர் இத்தகைய கொலைக் குழுக்களால் கொல்லப்பட்டு விட்டனர். மனித உரிமை மீறல்களை அவதானிக்க அங்கு நிறுத்தப்பட்டிருந்த 100 ஐ. நாவின் கண்காணிப்பாளர்களை இப்போது அவர்கள்வெளியேற்றி விட்டனர். படையெடுப்பை அங்கீகரித்து ஐ. நா தீர்மானம் நிறைவேற்றிய பின் இப்போது கெய்ற்றியில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிகின்றது. படையெடுப்பொன்று நடக்குமானால் அதற்கிடையில் மோசமான அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விடுவதோடு கெய்ற்றியில் பல நாசகார வேலைகளை இவர்கள் செய்யக்கூடும் எனப் பேசப்படுகிறது. என்ன நடக்கப் போகின்றது என்பதே தெரியாத நிலையில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் வாழும் கெய்ற்றிய மக்கள் ஐ. நாவின் பொருண்மிய தடையினால் மேலும் மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் வாடிக் கொண்டேயிருக்கின்றனர். படகேறிப் போகவும் வசதியற்ற மக்கள் இவர்கள் தமது நல்வாழ்வில் அக்கறை கொண்ட அடீஸ்ரீட் பாதிரியாரை ஜனாதிபதியாக தெரிவு செய்த இம்மக்கள் இன்று படும்பாடு சொல்லுந்தரமன்று. அதுபோலவே முற்போக்கு கொள்கைகளும் மனிதாபிமான உணர்வும் கொண்ட புரட்சிகர பாதிரியார் அரிஸ்டீட்டோ இன்று பெரும் சிக்கலான மனநிலை கொண்டவராக உள்ளார்.

பிறநாடுகளின் படைகளின் தயவில் அவர் தான் பதவியில்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# பகைவனே! படுக்கையை தட்டிப்பார் கட்டிலுக்குக் கீழே கரும்புலி இருப்பான்

— புதுவை இரத்தினதுரை

2.8.1994 அன்று.
என்றும் போல் அன்றும்.
கதிரோன் எழுவான் திசையில் எழுந்தான்.
படுவான் கரையில் விழுந்தான்.
இரவு நகர்ந்து,
தாயகத்தை தலைமுதல் கால்வரை
போர்த்திவிட, அதிகாலை ஆரம்பமானது.
''பலாலி''
நீண்டகாலம் தமிழனின் பாதம் படியாத நிலம்.
சிங்களப்பாட்டுக் கேட்டு சினந்திருக்கும் மரங்கள்.
வீசும் காற்றில் கூட அந்நிய நெடி.
செம்பாட்டு மண்
பூமிபுத்திரர்களின் வருகைக்காக காத்திருந்தது.
பகைவனின் படைத்தளத்தில்
பாட்டும், கூத்தும் பரவிக் கிடந்தது.
முன்னணிக் காவலரணில்...
அவர்களுக்கு முழு நம்பிக்கை.
எவன் நுளைவான் என்ற இறுமாப்பு.
நாளை...
வசாவிளானுக்கு மாடு தேடி வருபவனையும்
கட்டுவனுக்கு டு பார்க்க வருபவனையும்
எப்படிக் கொல்லலாம்.
எங்கு எறிகணை வீசலாம்.
எவ்விடத்தில் குண்டுகள் போடலாம்.
பியர் அடிக்கும் உயர்மட்டப் பேச்சுக்கள் முடிந்து.
அதிகாரிகள் நுளம்புவலைக்குள் நுளைய
விளக்குகள் நூருகின்றன.
யாரங்கே?
விமான ஓடு பாதைக்கு அருகிலும்
கட்டளைப் பணியகத்துக்குப் பக்கமாகவும்.
மெல்ல, மெல்ல நகரும் இவர்கள் யார்?
''கரும்புலிகள்''
காற்று, புன்னகைத்தபடி பெயர்களை உச்சரிக்கிறது.
மேஜர் நிலவன்
மேஜர் ஜெயம்
மேஜர் திலகன்
கப்டன் திரு
கப்டன் நவரத்தினம்.
லெப்டினன்ட் ரங்கன்.
விரல்மடித்து எண்ணிவிட்டு
காற்று விசிலடித்தபடி நகர்கிறது.
இருண்ட வானத்தில் வெள்ளியொன்று
இப்படிக் குரல் கொடுத்தது.
''வீரத்தின் வேர்களே! வெல்லுங்கள்
வழியனுப்பி வைத்த ''வரலாறு'' காத்திருக்கும்
புகுந்து விளையாடுங்கள்''
கட்டளைக்காக கரும்புலிகள் காத்திருந்தனர்.
''வோக்கிரோக்கி'' உயிர்த்தது.
முதல் வெடி விழுந்தது.
கொல்லும் எமன் வாகனம்
''பெல்'' உலங்குவானூர்தி எரிந்தது.
''பவள்'' கவசவாகனம் சிதறியது.
எவர் என்னானாலும் எனக்கென்ன?
குண்டு வ்ச்சு விமானம் குடல் தெறிக்க ஓடியது.
ஆணவத்துக்கு அடிவிழுந்தது.
கரும்புலிகளுக்கு ''
எட்ட முடியாத சிகரங்கள் எதுவும் இல்லை.
தொட்டசைக்க முடியாத சுமைகள் இல்லை.
கரும்புலிகள்
வேர்களை வெட்ட மட்டுமல்ல...
ஆணிவேர்களையும் அறுக்கக் கூடியவர்கள்.
கரும்புலிகளே!
சாவுக்குமட்டும் ஒப்பாரி வைக்கும் உலகம்
உங்களை எப்படி உணர்ந்து கொள்ளும்
முரடர்கள் என்றே முடிவெடுக்கும்.
உங்களுக்கு இளகிய இதயமென்று
உலகம் எப்போது உணர்ந்து கொள்ளும்.
''என் இனியவளுக்கு''
என்றோர் கடிதம் எழுதிவைத்துவிட்டு
பலாலிக்குள் புகுந்த பச்சைத் தளிரே!
உன்னிதயம் கள்ளிச் செடியல்ல...
முல்லைக்கொடி
மெல்லிய ஊற்றின் தோற்றுவாயே நீதான்.
உன் இதயத்தில்... எங்கோ ஒரு மூலையில்
காதல் கட்டவிழ்ந்திருந்தது.
ஆனால்
தலைவனின் பெயரையல்லவா
உன் இதயம் உச்சரித்துக் கொண்டது?
உங்களை உலகம் எப்படி உணர்ந்து கொள்ளும்?
அன்று போகின்றோம் என்றீர்கள்.
எங்கே என்றனர் தோழர்கள்.
''கிட்டண்ணாவிடம்'' என்று சிரித்தீர்கள்.
எத்தனை உறுதியிருந்தது உங்களிடம்.
ஆழமாக அல்லவா தாயகத்தை காதலித்தீர்கள்.
உள்ளே புகுந்த ஒருவனுக்கு
இருகாலும் இல்லாமற் போனது.
என்ன செய்தான் தெரியுமா?
''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''
சொல்லியபடியே தன்னைச் சிதற வைத்தான்.
உங்களை உலகம் எப்படி உணர்ந்து கொள்ளும்?
அண்டகோள்களையும் அளக்கும் விஞ்ஞானிகளே!
இந்த வேங்கைகளை எப்படி அளப்பீர்கள்
உலக அதிசயங்கள் ஏழு என்றவர்களே!
இந்த அதிசயங்களை எதிலே... சேர்ப்பீர்கள்
இந்த ''உண்மை மனிதர்களின்'' கதைகளை
எந்த எழுத்தாளன் எழுதத் தொடங்குவான்.
கரும்புலிகள் காற்றைப் போன்றவர்கள்
உணர முடியுமே தவிர, உற்றுப் பார்க்க முடியாது.
கரும்புலிகள் கடலைப் போன்று
அளக்க முடியாத வியாபகங்கள்.
எதிரியே!
ஓடி, ஓடி உலகெங்கும் ஆயுதம் வாங்கினாலும்
இந்த ''உயிராயுதங்களை'' எப்படி இல்லாதழிப்பாய்
பகைவனே!
படுக்கையை தட்டிப் பார்த்துவிட்டுத் தூங்கு
கட்டிலுக்குக் கீழே கரும்புலி இருப்பான்.

## சாளரம் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

## ஒரு மனப் பகிர்வு . . .

**யாழ்.** குடாநாட்டிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளில்' சாளரம், குறிப்பிடத்தக்கது எனச் சொல்லலாம்.

அறிவியல், கல்வி, இலக்கியம், அரசியல் ஆகிய அம்சங்களுடன் மேலதிகமான பல விஷயங்களையும் உள்ளடக்கியதாக இந்த மாதாந்த சஞ்சிகை வெளிவருகிறது.

சாளரம் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஜூன், ஜூலை மாத இதழாக வெளிவந்திருக்கும் இது 70 பக்கங்கள் கொண்டதாக உள்ளது

எமது மண்ணின் நிகழ்வுகளை கலைத்துவ பதிவாக கொண்ட ஓவியம் அட்டையை அலங்கரிக்கிறது.

தேடலுக்குரிய ஓவியமாக இது இருப்பினும் தெளிவின்மையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். நவீன ஓவியத்தின் பொதுத் தன்மையே இதுதானோ என்கிற எண்ணமும் எழாமலில்லை.

சரி, உள்ளடங்கும் விஷயங்களைக் கொஞ்சம் சுருக்கமாகப் பார்ப்போம்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கரும்புலிகள் மத்தியில்கடந்தஆண்டுஆற்றியஉரை இச்சஞ்சிகையின்மிக முக்கியம்வாய்ந்ததாகவும் அந்த உரை எக்காலத்திற்கும் உரியதாகவும் கொள்ளலாம்.

''கரும்புலிகள்வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள்'' என தலைவரின் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது கரும்புலிகள் பற்றிய சிந்தனை அலையை நெஞ்சில் எழவைத்து விடுகிறது.

கிராம வளமும் அபிவிருத்தியும் என்ற கட்டுரை எளிமைத் தன்மையற்றதாக உள்ளது.

இதே மாதிரியே 'நோயெதிர்ப்புப் பற்றிய அறிமுகம்' என்ற கட்டுரையையும் கருதத் தோன்றுகிறது.

ஆயினும் - றுவாண்டாவில் இனப்படுகொலை ...... 5 இலட்சத்திற்கு மேலானோர் பலி என்ற கட்டுரை மிக அற்புதமாக - படங்களுடன்- பதிவு செய்யப்பட்டுள்ளது. 'தமிழின் மாண்பு' 'சுதந்திரத்தின் பின்......' ''பாராளுமன்றத்தேர்தலில் ஐ. தே. க தோல்வியுற்றால் அடுத்த கட்டம் என்ன?'' ஆகிய கட்டுரைகள் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாணவர் சமுதாயம் அதிகளவில் விருப்புடன் வாசிக்கும் சஞ்சிகை என்பதால் உள்ளடங்கும் விஷயங்கள் இலகுவில் புரியக்கூடியதாக - தெளிவாக இருப்பது அவசியம் என்பதில் கருத்து முரண்பாடு இருக்க முடியாது.

'பகலவன் பதில்கள்' அட்டகாசம் ஆனாலும், இது இன்னும் விரிவாக்கப்பட்டிருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

'ஈழத்து இலக்கியம் மீதான எதிர்பார்ப்புகளும் இயங்க வேண்டிய எழுதுகோல்களும்' என்ற விவேக் எழுதிய கட்டுரை நன்கு அவதானிப்பிற்குரியதாக உள்ளது. அக்கட்டுரையில்-

தமிழகத்துப்பத்திரிகைகள் இன்று பிரசுரித்துக் கொண்டிருக்கும் படைப்புக்கள் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்ற படைப்பாளிகளுடையவை என்பதும் இங்கு குறிப்பிடவேண்டிய ஒன்றாகும் எனக்கூறியுள்ளார்.

இது ஒரு மிகையான கணிப்பீடு என்றே சொல்லத்தோன்றுகின்றது ஒரு மாதத்தில் நூற்றுக்கணக்கான இலக்கியப் படைப்புகள் தமிழக சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. இவற்றில் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்களின் படைப்புகள் எத்தனை வீதம் என்று சொல்ல முடியாது. வீதக் கணக்கிற்குள் அடங்காதவை. எப்போதாவது ஒரு சில படைப்புகள் பிரசுரமாகின்றன. இதுதான் யதார்த்த நிலை

இந்த விதத்தில் இந்த மண்ணில் உள்ளவர்கள் 'சற்றுத்தேறுவார்கள்.

பேராசிரியர் துரைராசா பற்றிய அஞ்சலிக் கட்டுரை இக் காலத்துடன் பொருத்தப்பாடானது. 'விடிவு' என்கிற உருவகக் கதை சிறப்பானதாகக்கொள்ளத் தோன்றுகிறது.

'மாணவர் பக்கம்' 'என் போராட்ட வாழ்வின் அத்திவாரம்' என்ற தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் உணர்வலைகள்' 'உள்ளூர் உணவு உண்போம்' என்ற டாக்டர் சிவபாலனின் கவிதை, 'சங்கென ஒலிக்கும் சாளரத்திருவே! வாழி' என்ற புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதை ஆகியவை சிறப்பாக உள்ளன.

அடக்குதல், ஒடுக்குதலுக்குள்ளான ஓரினம் ஆயுதம் தாங்கி விடுதலைக்காகப் போராடும் இந்த மண்ணில் 'சாளரம்' போன்ற சஞ்சிகைகளின் தேவை அதிகம் உள்ளது.

மூன்றாண்டுகளைக் கடந்து நான்காம் ஆண்டுக்குள் நுழைந்துவிட்ட சாளரத்தின் பணி பெரியது.

-அர்ச்சனா

# பலாலிப் படைத்தளத்தை அதிர வைத்த கரும்புலிகளின் வீரசாதனை

பலாலிப் பெருந்தளத்தின் நெஞ்சுக்கூட்டுக்குள் மீண்டுமொரு முறை ஊடுருவிப் புகுந்த கரும்புலிகள் எதிரியின் உயிர்நாடியை உலுக்கியெடுத்துவிட்டனர்

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் குடியிருக்கும் அப்பெருந்தளம் அன்றைய தினம் - வாந்திபேதிகண்ட கிராமத்தைப்போல- அல்லோலகல்லோலப்பட்டது. அதிஉச்ச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த விமான ஓடுபாதையில் வெற்றிசரமாக கால்பதித்த கரும்புலிகள் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலங்கு வானூர்தி ஒன்றையும், அதை காவல் காத்து நின்ற 'பவள்' கவசவாகனம் ஒன்றையும் தாக்கி அழித்தனர்.

அத்துடன், 'டைனசோர்' போன்ற பலத்தையும்உருக்குக் கோட்டை போன்ற பாதுகாப்பையும் கொண்டமைந்த பெருந்தளமாகவே பலாலி கூட்டுத்தளம் செயற்படுகின்றது என்ற சிங்களத் தளபதிகளின்கற்பனையையும் இக் கரும்புலித்தாக்குதல் தகர்த்தெறிந்துவிட்டது.

சிங்களப்படைத்துறையை திகைக்கச் செய்துவிட்ட இப்பெருந் தாக்குதலின்போது ஆறு கரும்புலிகளும் - இரண்டு வேவுப்புலிகளும் வீரச்சாவடைந்துள்ளனர்.

சிங்கள அரசின் படைபலத்தைப் பொறுத்தளவில் அதன் முதுகெலும்பாக இருப்பது வான்படைதான். இக்கரும்புலித் தாக்குதலின் இலக்கும் வான்படையின் விமானங்களாகவே இருந்தது.

சண்டைகளின்போதும்சரி, குடிமனைகள்மீது குண்டுகள் போடும் வேளைகளிலும்சரி 'அவிழ்த்து விட்ட எருமைகள் போல' வான்பரப்பில் ஆதிக்கம் செலுத்தும் குண்டுவீச்சு விமானங்கள் தாம் நினைத்தமாதிரி நிலம்மீது போர்தொடுத்து சண்டைகளின் போக்குகளை திசைதிருப்பி விடுவதுடன் மக்களுக்கும் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த 'வான் எருமைகள்' ஆகாயத்தில் மேய்ச்சலில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவற்றை அச்சொட்டாக அடித்து வீழ்த்தும் வசதிகள் புலிகள் இயக்கத்திடம் இல்லாதிருக்கின்றது.

எனவே அந்த வான் எருமைகள் கட்டில் இருக்கும் போதே அவற்றைக் கொன்றுவிட வேண்டும் அல்லது அவற்றின் கால்களை அடித்து நொருக்கி முடமாக்கி விடவேண்டும் என்றதொரு திட்டத்தை வரைந்த தலைவர் அவர்கள் அதை செயற்படுத்துவதற்குரிய தந்திரோபாயங்களையும் - பயிற்சிகளையும் வகுத்துக் கொடுத்ததுடன் இத் தாக்குதலை இறுதிவரை நெறிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

2-8-94 அதிகாலை 2.45 மணிக்கு கரும்புலிகள் அணி ஒன்று அதை நிறைவேற்றி முடித்தது.

வான்தளம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலின் இராணுவ பரிமாணத்தை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் அதை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்து, பின்னர் ஒன்றிணைக்கும் போதே அப் பெருந் தாக்குதலின் இராணுவ பரிமாணத்தை முழுமையாகக் கண்டுணர முடியும்.

1) வெற்றிகரமான ஊடுருவல்
2) வான்தளம் மீதான கரும்புலித் தாக்குதல்
3) இந்த ஊடுருவலுக்கும் - தாக்குதலுக்குமான வேவுப்பணி

இந்த மூன்று பகுதிகளும் இத்தாக்குதல் திட்டத்தின் முக்கிய அங்கங்களாக இருக்கின்றன.

## வெற்றிகரமான ஊடுருவல்

பலாலிப் பெருந்தளம் 30 ச. மைல் பரப்பளவுக்கும் கூடுதலான நிலப்பரப்பில் அமைந்திருக்கின்றது. இப் பெருந்தளத்தைச் சூழ பிரமாண்டமானதொரு தற்காப்பு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.


• தளத்தைச் சுற்றிவர 30 - 40 மீற்றர் தூரங்களுக்கிடையில் ஒரு காவலரணும், ஒவ்வொரு காவலரணிலும் தேவையான நேரம் பயன்படுத்தக் கூடியவாறு வெளிச்சம் பாய்ச்சிகளும் இருக்கின்றன. இது தவிர காவலரண்களுக்கு முன்னாலும்- இடையிலும் ஏராளமான மிதிவெடிகளும், காவலரண்களுக்கு முன்புறமாக மூன்று அல்லது நான்கு கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, தளத்தின் உள்ளே என்ன நடைபெறுகின்றது என்பதை வெளியில் இருந்து அவதானிக்க முடியாதபடி 'புல்டோசர்கள்' அமைத்த மண் அணைகளும் பலாலி தளத்தின் வெளிப்பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன.

இந்தத் தடைகளையெல்லாம் தாண்டித்தான் ஊடுருவல் செய்யும் ஒரு போராளி உள்ளே செல்ல வேண்டும். அதுவும் சண்டையிடாது இரகசியமாகக் கடக்க வேண்டும் என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு அம்சம்.

பலாலியைச் சூழவுள்ள எந்தவொரு வெளிக்காவலரணிலிருந்தும் மத்தியில் இருக்கும் வான்தளமானது பல கிலோ மீற்றர் உள்ளேயே உள்ளது. சில இடங்களில் இந்த இடைத்தூரம் பத்து கி. மீற்றரை விட அதிகமாக இருக்கும்.

வெளிக்காவலரண் பகுதிகளூடாக களத்தின் உள்ளே புகுந்து விட்டாலும் கூட உட்பகுதியில் சிதறிக்கிடக்கும் எந்தவொரு சிப்பாய்களது கண்களிலும்படாது, உள்ளே அமைந்திருக்கும் மினி முகாம்கள் மற்றும் ரோந்து அணிகளின் முகத்தில் எத்துப்படாது, நடந்து, அதிகூடிய பாதுகாப்பில் உள்ள வான் தளத்தை அடைய வேண்டும்

இது வெறும் நடைப்பயணம் அல்ல
இதுவும் ஒரு போர்ச்செயற்பாடாகும்



இந்த ஊடுருவற் போர் நடவடிக்கையின் போது-தளத்தின் உள்ளே உள்ள-தச்சன்தோப்பு என்ற பகுதியில் அதாவது வான் தளத்திலிருந்து சுமார் பத்துகிலோமீற்றர் தூரத்தில்வைத்து இந்தக் கரும்புலிகள் அணியை சிங்களச் சிப்பாய்கள் சிலர் கண்டுவிட ஒரு திடீர் சண்டை மூண்டுவிட்டது.

1-ம் திகதி மாலை 6.30 மணியளவில் தளத்தின் உள்ளே நடந்த இத் திடீர் துப்பாக்கிச் சண்டையால் முழுத்தளமுமே உசார்படுத்தப்பட்டது. இந்த சண்டையை சமாளித்துவிட்டு தொடர்ந்தும் வான்தளத்தை நோக்கி அந்த அணி நகரத்தொடங்கியது. அன்றிரவே நடுச்சாமம் கழித்து 2.45 மணியளவில் வான்தளத்தை சென்றடைந்துவிட்ட கரும்புலிகளணி அங்கிருந்த பாதுகாப்பு வியூகங்களையும் உடைத்தெறிந்து விட்டு கட்டிக்கிடந்த வான்எருமைகளைத் தேடும் பணியைத் தொடங்கினர். சண்டை ஆரம்பமாகிவிட்டது.

## வான்தளம் மீதான கரும்புலித் தாக்குதல்

இந்த தேடுதல்வேட்டை இலகுவானதாக இருக்கவில்லை. சுமார் இரண்டு கிலோ. மீற்றர் நீளமும் 500 மீற்றர் அகலமும் கொண்ட விமான ஓடு பாதையுடன் கூடிய தளப்பகுதியில், நடுநிசி இருளில் நாற்புறமும் இருந்துவரும் துப்பாக்கி ரவை மழைக்குள் எங்கே விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை தேடிக்கண்டு பிடிப்பது சாதாரணவிடயமில்லை. இருட்டறைக்குள் வெறுங்கண்ணால் ஊசியைத்தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஒப்பானது. அதுவும் வெறும் தேடலல்ல; சண்டையிட்டபடி தேடவேண்டும். கண்ணில்பட்டதும் இருளுக்குள் குறிவைத்துத் தாக்கி அழிக்கவேண்டும்

ஒரு உலங்கு வானூர்தியையும் அதற்கு பாதுகாப்பாக நின்ற 'பவள்' கவச வாகனத்தையும் நொருக்கித்தள்ளிய கரும்புலிகள் அந்த 2. கி, மீ. நீள-500 மீற். அகல விமானத்தளத்தில் குண்டு வீச்சுவிமானங்களைத்தேடி வேட்டையில் இறங்கிய போதே தளத்தின் ஒரு மூலையில் இருளில் பதுங்கிக் கிடந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் வெளிச்சங்களின் உதவியின்றியே ஓடுதரையில் ஓடி மேலெழுந்து-தப்பிச்சென்றுவிட்டன.

முன்னர் கூறியபடியே விமானத்தளத்தை அண்மிக்க முன்னரே நடந்த திடீர் சண்டையால் தளப்பகுதி முழுவதுமே உசார் நிலையில் வைக்கப்பட்டது. இதன் காரணமாக விமானங்களின் அருகிலேயே தயாராக கண்விழித்து இருந்த விமானிகள் ஓடுதரையின் ஒரு மூலையில் வைத்து உலங்குவானூர்தி தாக்கப்பட்டதுமே விமானங்களை கிளப்பிக் கொண்டு தப்பிச்சென்றுவிட்டனர்.

இவ்வளவும் நடைபெறும் போது வந்த அணி திரும்பிச் செல்வது பற்றி கற்பனையே செய்து பார்க்க முடியாது. அதனால்தான் கரும்புலிகள் அணி தாக்குதலுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

## தாக்குதலுக்கான வேவுப்பணி

தளத்துக்குள் ஊடுருவிச் செல்வது முதல் விமானத்தளத்தை பாதுகாப்பாக அடைவது வரை. போகும் பாதையை கண்டறிந்து, தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்து. தாக்குதல் அணியாகிய கரும்புலிகள் அணியை வெற்றிகரமாக உள்ளே கூட்டிச் சென்ற வேவு வீரர்களது பணி இத் தாக்குதல் திட்டத்தின் முதுகெலும்பாக இருந்தது. வேவுவீரர்கள் அப்பணியை திறம்படச் செய்தனர். மேஜர் சேரன் (அசோக்), கப்டன் ஈழவன் (ராஜேஸ்) ஆகிய இரு வேவுப் புலிகளும் இந்தத் தாக்குதலில் வீரச்சாவடைந்தனர்.

## கரும்புலி வீரர்களது நெஞ்சுரமும் ஈகமும் - பாசமும்

எந்த இடத்திலும் - எந்த வேளையிலும் -எந்த வடிவத்திலும் தாய் மண்ணிற்காக சாவைச் சந்திக்கத் தயாராக இருப்பவர்கள் தான் எங்களது கரும்புலிகள். கரும்புலிகள் அணியில் இணைந்து கொண்டபின்னரும் 'என்னை முதலில் விடு'என்று அடம்பிடிக்கும் தீரநெஞ்சம் கொண்டவர்கள்அவர்கள்.

கரும்புலியாகச் செல்லும் அந்த இறுதிக் கணத்திலும் எந்த வித சலனமோ, பதற்றமோ இல்லாது சலனப்பட்டு - வேதனைப்பட்டு நிற்கும் சக தோழர்களை தேற்றி, 'பம்பல்' அடித்துச் செல்லும் அந்த காட்சிகள் சாதாரண மனிதர்களுக்கு நம்பவே கடினமானதாக இருக்கும்.

சண்டைக்குத் தேவையான பொருட்களை ஒரு பயணப் பொதிக்குள் வைத்து தாக்குதலுக்கு செல்ல தயாராக இருந்த இந்த கரும்புலிகளைப் பார்த்து 'என்னபயணம் புறப்பட்டாச்சோ?' என்று தளபதி கேட்க ஒரு கரும்புலி வீரன் சொன்னானாம்:

''ஓம் பயணம் புறப்பட்டிட்டம்

நீண்ட பயணம்

கிட்டண்ணையிட்டை போறம்.''

தளத்தினுள் ஊடுருவிச் சென்று கொண்டிருந்த கரும்புலிவீரர்களை எதிரியின் நிலைக்கு சமீபமாக ஒரு குறிப்பிட்ட தூரம்வரை சென்று அவர்களை இறுதியாக வழியனுப்பிவிட்டு திரும்பிய இன்னொரு தளபதியிடம் ஒரு கரும்புலிவீரன் சொன்னானாம்:

''அண்ணை கவனமாகப் போங்கோ''.

இதேவேளை தான் நேசித்த தன்னை நேசித்த தன் அன்புக்குரியவளுக்கு ஒரு இறுதிக் கடிதத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பகைவன் குகைக்குள் சாதனை



கரும்புலி மேஜர் நிலவன்(கெனடி)
(ஜெசுமி பெர்னாண்டோ)
வண்ணாகுளம், அடப்பன், மன்னார்



கருமபுலி மேஜர் ஜெயம
(குணநாயகம் தேவராசா)
திருகோணமலை

எதிரியவன் இதயமதில் இ
எட்டுத் திக்கும் உற்றுநோக்
பகைவர்களின் படைத்தள
கரும்புலிகள் வீரமதால்...




கரும்புலி கப்டன் திரு
(கோணமலை முகுந்தன்)
அம்பாறை




கரும்புலி கப்டன் நவரெட்ணம்
(கிருஸ்கோகு லெம்பேட் அண்ணாதாஸ்)
செட்டிகுளம்
தற்போதைய முகவரி:- மடு அகதிமுகாம், மன்னார்

# படைத்து சரித்திரமானவர்கள்



கரும்புலி மேஜர் திலகன்
(சுப்பையா ராஜ்)
மட்டக்களப்பு



மேஜர் சேரன் (அசோக்)
(குணசிங்கம் குணராஜ்)
தனங்கிளப்பு - சாவகச்சேரி

விழுந்தது
.வெடி அதிர்ந்தது
துலுங்கியது - இந்தக்
ிங்கியது.



ரும்புலி லெப்டினன்ட் ரங்கன்
(குணமாலை ரதிக்குமார்)
தற்போதைய முகவரி:-
சுரபியடி, வட்டக்கச்சி, கிளிநொச்சி



கப்டன் ஈழவன் (ராஜேஸ்)
(வேலாயுதம் உபேந்திரன்)
புலோலி தெற்கு, புலோலி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## தேவை கனவிற்குப் பாதுகாப்பு

மீண்டும்,
சிங்கத்தின் குகைக்குள்
ஒரு "ஒப்பிறேசன்"
தேனீயின் கூட்டுக்குள் புகுந்து
ராணியின் சிறகுடைப்பு!
பனிக்கரடியின் கூட்டுக்குள்
புலிகளின் ஊடுருவல்!

விதைக்கப்பட்ட மிதிவெடிகளை கடந்து,
அமாவாசை இரவையும்
ஆயிரம் சூரிய பிரகாசமாக்கும்
மின் ஒளிகளுக்கு ஊடாக,
ஈ கூட நுழைய முடியா
முட் கம்பிகளையும் தாண்டி
காற்றுப் போலவே கரும்புலிகள்
எதிரியின்
மூச்சுக் குழாயை
நெருக்கிப் பிடித்தார்கள் ..

கூட்டுப் படைத்தளம்
புலிவீரர்களால்
கழிக்கப்பட்டது.
காணாமல் போனது
'பெல்'லும் 'பவளு'ம் மட்டுமல்ல
எதிரியின் மானமும் ..

குடாநாட்டில்
தேர்தல் வைக்க வந்தவர்கள்
பாதுகாப்பு பிரதேச
எல்லை மாறியதால்
பாதை மாறினார்கள்...

தேவை
கரும்புலியின் தாக்குதலிலிருந்து
அரசின்
கனவுக்குப் பாதுகாப்பு
தென்னிலங்கை பத்திரிகையில்
இப்படியொரு விளம்பரம்
வெளிவரக் கூடும்.

- சுந்தரலிங்கம் கெங்காதரன்
அச்சுவேலி

## மண்ணின் வாசனையோடு மீண்டு(ம்) வாருங்கள்

என்றும் எங்கள்
நெஞ்சங்களிலே கருவாகி
விட்ட
கரும்புலிகளே!
வரலாறு காண்கின்ற
விடியலின் விளக்குகளே!
ஈழத்தின் இன்னல்களை
இதயங்களில் ஏந்தியவர்
களே!
ஈடில்லாத உயர்வுகாண
உணர்வுகளை உரமாக்கி
தமிழ் உறவு கொண்டு
தமிழீழ...
காற்றோடும்
மண்ணோடும்காவியமான
சரித்திர புருசர்களே!
நீங்கள்...
வளர்ந்த மண்ணின்
நிமிர்ந்த மண்ணில்
புனித நினைவோடு
பூம்பாதச் சுவடுகளை
பூத்தூவி பூசிக்கின்றோம்.
உங்கள் நெஞ்சத்து வீரத்
திற்கு
நிகர் இங்கு ஏதுமில்லை...
தமிழீழ நினைவோடு
காவியமானவர்கள் நீங்கள்
உங்கள்
தியாகம்
எங்கள் தேச
இருளை அகற்றும்;

- வே அன்பழகன்

## தேசத்தின் விடுதலைக்காய்.....

பொழுது விடியுமுன்
புலிகள் தாக்கினர்
புகுந்தனர் படைத்தளத்தினுள்
அழித்து விட்டனர்
அவர்களின் மானத்தை.
அஞ்சிய படையினர்
பரலோகம் எண்ணினர்.

எடுத்த காரியம் முடித்திடும்
கரும்புலிகள்
விடுத்த தாக்குதல்
படைத் தளத்தின் உறுதியை
குலைத்தது.
அடுத்த தாக்குதல் எதுவென
எண்ணிட வைத்தது.

நெடுக்கே திரியும் ஹெலியும்
கருகிப் படுத்துறங்கியது
குண்டினைப் பாய்ச்சும்
பவளும் குலைந்தே போனது
கொடிய இருட்டின் குமுறலில்
வலிய கரும்புலிகளின் செய்கைகள்
உலகின் கவனத்தை
மீண்டும்.....மீண்டும்
தம்பால் திருப்பிடும்.

தேசத்தின் விடுதலைக்காய்
பாசத்தின் எல்லையை துறந்தவர்களின்
தாக்குதல்கள்
தேர்தல் காலத்தில்
எம் மக்களின் வீரத்தின்
தேவையை உணர்த்திற்று.

— மருத-பிரதீபன்
நல்லூர்

## பலாலி

கொடுத்து விட்டுச் சென்றான் இன்னொரு கரும்புலி.

இக் கரும்புலித் தாக்குதலுக்கு தலைமை ஏற்றுச் சென்ற மேஜர் கெனடியினது மன உணர்வு பற்றி அவருடன் கூட இருந்த போராளி சிலவற்றை நினைவு கூர்ந்தார்.

வான்தளம் மீதான கரும்புலித் தாக்குதலுக்கான ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டிருந்த போது ஒரு நாள் கெனடி கூறினானாம்:

''இந்தக் கரும்புலித் தாக்குதலுக்கும் கனபேர் போக விரும்புறதால 'லொத்தர்' போட்டுத்தான் ஆட்களை தேர்ந்தெடுக்கப் போவதாக தளபதி சொல்லுகிறார். இது சரிவராது. எனக்கு சில வேளை 'லொத்தர்' விழாமலும் விட்டிடும். எனவே லொத்தர் போடாமலே என்னைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி தளபதியிட்ட கேக்கப்போறன்'' என்றாராம்'

விரும்பியவாறே கெனடிக்கு அந்த சந்தர்ப்பமும் கிடைத்தது. தனது சக கரும்புலித் தோழர்களை ஒருங்கிணைத்தவாறு வான்தளத்தினுள் தாக்குதல் தொடங்கிய விதத்தையும் எப்படி களநிலமை உள்ளது என்ற விபரத்தையும் 'வோக்கி' மூலம் அறிவித்துக்கொண்டிருந்த போது கெனடியின் குரலில் இருந்த உறுதியும்- நிதானமும்- தெளிவும் கேட்டோரை மெய்சிலிர்க்கச் செய்தது.

தாக்குதலின் இறுதிக்கட்டத்தில் குண்டடிபட்டு நகர இயலாத நிலையில் தன்னைத்தானே தகர்க்கப் போகும் அந்த இறுதி வேளையில் வோக்கியூடாக கெனடி இறுதியாகக் கதைத்தான்.

''எனக்கு இரண்டு காலும் இல்லை.
புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்''

இந்த வார்த்தையுடன் வான் தளத்துக்குள் சென்ற கரும்புலிகளின் குரல் பின்னர் வான் அலையூடு வரவேயில்லை.

## 3-ம் ஆண்டுநினைவஞ்சலி



### லெப். வாசு

(பொன்னுத்துரை இந்திரகாசன்)

தாயின் மடியில் 02. 12. 1971
வீரச்சாவு 05. 08. 1991

களங்கள் காண விரைந்தாய்
கட்டைக்காட்டை அதிரவைத்தாய்
காரணத்துடன் நீ மடிந்தாய்
காவியங்கள் படைத்து விட்டாய்.

இவரின் நினைவு அஞ்சலியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 16, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

தகவல்:- காசன் மணிக்கூட்டுத்தொழிலகம்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(9028)

## 4-ம் ஆண்டுநினைவலைகள்

பிறப்பு
1970 — 12 — 21

வீரச்சாவு
1990 — 08 — 05



### 2-ம் லெப். மாதங்கி

[சுமதி, மாணிக்கம்]

ஆனதுவாம் ஆண்டு நான்கு நீ மறைந்து
ஆர் சொன்னார்..................?
நம் தேசத்தில் நீ
வீசுகின்ற காற்றிலும்
விளையும் எந்த நாற்றிலும்
நேற்று பலாலிக்குள்
பாய்ந்து வினை முடித்த
புலிவீரரவர் வீர ஆற்றலிலும், நீ தானே

இவருடன் கோட்டையில் வீரச்சாவெய்திய ஏனைய போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

பருத்தித்துறை.

- குடும்பத்தினர்

(9026)

யாழ்ப்பாணம் நல்லூர் இணை நூலகம்.

## பலாலி விமானப்படைத் தளம் மீதான தாக்குதல்

# படைத்தளங்களின் பாதுகாப்பு வியூகத்திற்கு கரும்புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கை

இரண்டாம் திகதி அதிகாலை 2.45 மணியளவில், கரும்புலிகள் அணியொன்று, பலாலி விமானப் படைத் தளத்தின் மத்தியில் நடத்திய 'கொமாண்டோ' பாணியில் அமைந்த கரும்புலித் தாக்குதலானது சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதில் பெரும் வியப்பெதுவும் இல்லை.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள இவ் வேளையில் இடம் பெற்ற இத் தாக்குதல் குறித்து ஆளும் ஐக்கிய தேசியகட்சி அரசாங்கம் வெளியில் பேசுவதற்குத் தயங்கினாலும் அரசாங்கத்தினதும். இராணுவத்தினரினதும் நடவடிக்கைகள் தாக்குதலின் முக்கியத்துவத்தை உணர்த்தத் தவறவில்லை.

இத்தாக்குதலானது, சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்படுத்திய இராணுவ தளபாட இழப்புக்கள் எவ்வளவு? துருப்புக்களின் உயிர் இழப்புக்கள் எவ்வளவு? என்பதல்ல இங்கு முக்கியமானது. இத்தாக்குதலானது, இரண்டாம் கட்ட ஈழப்போரில் சிறிலங்கா இராணுவம் இறுதியாகத் தெரிவு செய்திருந்த 'தற்பாதுகாப்பு' ஏற்பாடுகளுக்கு சவாலாகியுள்ளது என்பதே முக்கியமானதாகும்.

### கேள்விக்குள்ளாகும் ராணுவத்தின் இருப்பு

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதில் இருந்து வடபுலத்தில் சிறிலங்கா இராணுவத்தின் 'இருப்பு' காலத்திற்குக்காலம் கேள்விக்குரியதாகவே மாறிவந்தது. இந்த வகையில், ஆரம்பத்தில் இருந்த சிறுமுகாம்களை போர் தொடங்கிய காலத்திலேயே இழக்கவேண்டி வந்தது. இந்நிலையில்ஒவ்வொருஇழப்பின்போதும் போர் முறைத்திட்டத்திலும், பாதுகாப்பிலும் சிறிலங்கா தரப்பு தீவிர கவனம் செலுத்தவேண்டியிருந்தது.

இந்நிலையில், பாரிய முகாம்கள் மட்டுமே தாக்குப்பிடிக்க முடியும் என்ற நிலை உருவாகியபோது, 1990 ஆம் ஆண்டின் இறுதியிலும்,1991ஆம் ஆண்டின் முற்பகுதியிலும்மாங்குளம், முல்லைத்தீவு, சிலாவத்துறை,ஆனையிறவு படைமுகாம்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் பாரிய முகாம்களின் இருப்பையும் சர்ச்சைக்குரியதாக்கியது.

இதைத் தொடர்ந்து, இராணுவத்தின் இருப்பானது, கூட்டுப்படைத் தளங்கள் என்ற வடிவத்தைப் பெற்றன. இத்தளங்கள் பெரும்பாலும் கடல் வழி விநியோகத்துடன் தொடர்பு கொண்டவையாக இருந்ததோடு விமானப்படையின் உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவையாகவும், இதேசமயம் விமானங்கள் இறங்கிச்செல்ல முடியாத இடங்களில் உலங்கு வானூர்திகள் இறங்கு தளங்களை கொண்டவையாகவும் இருந்தன.

### ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவ கிராமங்கள்

முப்படைத்தளங்களின் இவ் விரிவாக்கமானது, இறுதியில், இராணுவ முகாம்கள் என்ற நிலையில் மாறி ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவக் கிராமங்கள் என்ற நிலையைப் பெற்றன.இவ் ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவ கிராமங்கள் இருபத்திநான்கு மணி நேரமும் இராணுவத்தினரின் நேரடிக் கண்காணிப்பிற்குள் கொண்டு வரப்பட்டன.

ஆனால்,சிறிலங்கா அரசுதரப்பினால் இதற்கு 'பாதுகாப்பு' வலயம் அல்லது 'விடுவிக்கப்பட்டபகுதி' என விளக்கம் கொடுக்கப்பட்டது. உண்மையில் இது இராணுவத்தினரின் பாதுகாப்பு ஏற்பாட்டின் ஒருபகுதியாகவே இருந்தது.

இவ்வாறான, பாதுகாப்பு வலயங்களுக்கு பௌதிக ரீதியான அமைப்புடன் கூடிய பாதுகாப்போடு பல ஆயிரக்கணக்கான ஆளணியினருடன் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. இந்தவகையிலேயே தீவுப்பகுதிகள், மற்றும் வலிகாமத்தின் வடபகுதி இராணுவத்தின் பாதுகாப்பு வலயங்களாகக் கொள்ளப்பட்டன.



### பாதுகாப்பு வலயத்தின் சிதைவு

ஆனால், இன்றைய நிலையில் சிறிலங்கா இராணுவத்தின் இத் தற்பாதுகாப்பு ஏற்பாடுகளே கேள்விக்குரியனவாகியுள்ளன. ஏற்கனவேஇப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த வகையில் மன்னார் தீவினுள்ளும் வடபகுதியிலுள்ள தீவினுள்ளும் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் முக்கியமானவை. இப் பாதுகாப்பு வலயத்தினுள் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சிலதாக்குதல்களினால் 'பாதுகாப்பு' ஏற்பாடுகள்மட்டுமல்ல சிறிலங்காவின் இராணுவ வரலாற்றினையே அவை தலைகீழாக மாற்றியும் இருந்தன.

இந்த வகையில் 1992 ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி அராலித்துறையில் வெடித்த கண்ணிவெடியானது சிறிலங்காவின் வடபகுதி இராணுவத் தலைமையையே அழித்தது. ஆனால் உண்மையில் இவ் அழிவானது, சிறிலங்காவின் முக்கிய தளபதிகளை மட்டுமல்ல, வடபகுதியில் அதன் 'பாதுகாப்பு' ஏற்பாடுகளின் தந்திரோபாயத்தையும், சிறிலங்கா இராணுவத்தின், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருபாயத்தையுமே அழித்ததெனலாம்.

இதேசமயம் பூநகரி கூட்டுப் படைத்தளம் மீது கடந்த ஆண்டு நவம்பரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 'ஒப்பரேசன் தவளை' என்னும் தாக்குதலானது, வடபகுதியில் கூட்டுப்படைத் தளங்களின் பாதுகாப்பையே கேள்விக்குரியதாக்கியிருந்தது.

இந்நிலையில் வடபகுதியில் உள்ள ஒவ்வொரு முகாமும் கூட்டுப்படைத் தளமாக மட்டுமல்ல, மொத்தம் இரு பட்டாலியன்களுக்கும் மேற்பட்ட அணிகளைக் கொண்டதாக ஆழ்கடல் வழித் தொடர்பு உள்ளதாகவும் இருந்தால் அன்றி படையினர் நீண்ட நேரம் தரிக்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்தியது.

ஆனால் இரு தினங்களின் முன் பலாலி விமானப்படைத்தளத்தினுள் கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது ஒட்டுமொத்தமாக சிறிலங்காவின் போர்முறைத் திட்டத்திற்கும் பாதுகாப்பு வியூகத்திற்கும் பெரும் சவால் விட்டுள்ளது.

'பாதுகாப்பு வலயத்தினுள்' அதிகரித்த இத் தாக்குதல்களானது பலாலி விமானப்படைத்தளத்தில் இடம்பெற்ற தாக்குதலோடு அதன் மையம்வரை சென்றது. இது பலாலி விமானப்படைத் தளத்தின் இதயம்வரை முன்னேறி நடாத்தப்பட்ட தாக்குதலாகும் - இந்த வகையில் இத்தாக்குதலானது எதிரியின் குகைக்குள் புகுந்து அவன் நெஞ்சில் குத்திய செயலுக்குஒப்பானதாகும்.

இதேவேளை கடந்தகாலத் தாக்குதல்களில் இருந்து இத் தாக்குதல் சிலவகைகளில்வேறுபடுகின்றது.ஆரம்பத்தில் பாதுகாப்பு வலயத்திற்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்கள் அனேகமாக அதன் எல்லையில் இடம் பெற்றதோடு, அத்தாக்குதலின் வடிவமும் மாறுபட்டதாக, பெரும்பாலும் நேரடி மோதலைத் தவிர்ப்பவையாகவுமே இருந்தது.

இருப்பினும்தொடர்ச்சியாக இவ் வலயத்திற்குள் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இருந்ததோடு, பாதுகாப்பு வலயத்தின் உட்பகுதிவரையும் அது விரிந்தது. ஆனால் அவை - பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போது இடம்பெற்ற பலாலி முகாம் மீதான ஊடுருவலைத் தவிர - கரும்புலித் தாக்குதலாக அமையவில்லை என்பதோடு, பாதுகாப்பு வலயத்தினுள் அதன் மையமாக இருந்த இராணுவதளங்களின் மையப்பகுதி வரை செல்லவில்லை என்றே கூறலாம்.

### கரும்புலித் தாக்குதலின் தேவை

ஆனால் இத்தாக்குதல் கரும்புலித் தாக்குதலாகவே அமைய வேண்டிய தேவையும் அவசியமும் இருந்தது. ஏனெனில் எதிரியின் இருதயம் வரை முன்னேற வேண்டிய அவசியம் தாக்குதல் அணிக்கு இருந்தது.

இதேசமயம் இத்தாக்குதல் நடவடிக்கையானது கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பெரும்பாலான கரும்புலித் தாக்குதல் மாதிரியில் இருந்து வேறுபட்டதாகும். இத்தாக்குதல் முன்னைய தாக்குதல்களைப் போன்று ஒரு 'தற்கொடைத்' தாக்குதல் ஆயினும் இது ஒரு 'கொமாண்டோ' பாணியில் அமைந்ததொன்றாகும் இத்தாக்குதலின்போது,கரும்புலிகள் கடைப்பிடிக்க வேண்டிய போர்முறைகள், நடவடிக்கைகள் என்பன முன் எப்பொழுதும் இல்லாதவாறு வேறுபட்டிருந்தன.

இதில் முக்கியமான மாறுபாடுகளில் முதலில் குறிப்பிட வேண்டியது கரும்புலிகள் அணியாகச் செயற்பட்டு இலக்கு நோக்கி முன்னேறவேண்டி இருந்ததாகும். கடந்த காலத் தாக்குதலில் ஒன்றைத்தவிர ஒருவர் அல்லது இருவர் என்ற ரீதியில் ஒரு வாகனத்திலோ அன்றி படகிலோ தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் தடங்கல்களைத் தவிர்ப்பதும், முடிவுகளை எடுப்பதும் ஒரு வகையில் சுலபமானதாகவே இருந்திருக்கமுடியும். ஆனால் ஒரு 'கொமாண்டோ' அணியாக கரும்புலிகள் ஒரு இலக்குநோக்கி முன்னேறி வெற்றிகரமாக தாக்குதலை மேற்கொண்டமை இராணுவ ரீதியில் கிடைக்கப்பெற்ற புதிய பரிணாமம் என்றே கொள்ளமுடியும்.

அடுத்ததாக கரும்புலிகள் அணி ஊடுருவிச் சென்ற விமானப்படைத் தளம் சிறிலங்கா இராணுவத்தினராலும்,விமானப்படையினராலும்உச்சப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட இடமாகும். அத்தோடு, ஊடுருவிச் சென்ற தூரமானது சுமார் நான்கு கிலோ மீற்றர்களுக்கும் மேற்பட்ட தூரமென இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தாக்கி அழித்தல் என்பதோடு ஊடுருவி நுழைதல் / முன்னேறுதல் என்பது தாக்குதல்திட்டத்தின் முக்கியமானதொரு பகுதியாகவே இருந்திருக்கவேண்டும்.

இந்நிலையில் பலாலி விமானத் தளத்தின் ஓடுபாதைவரை விடுதலைப் புலிகள் ஊடுருவிச் சென்றமையானது விமானப் படையின் பாதுகாப்புமையத்தையே விடுதலைப் புலிகள்எட்டிவிட்டதற்குசமனானதாகும். இதன் மூலம், கரும்புலிகள் வடபகுதியில் உள்ள சிறிலங்கா ஆயுதப்படையினரின் எந்த இலக்கையும் தாக்கும் வல்லமையைப் பெற்றுள்ளமை நிரூபணமாகியுள்ளது.

இந்த வகையில் தேசியத் தலைவர் பிரபாகரன் சிந்தனையில் உதித்து,தியாகமும்,அர்ப்பணிப்பும் நிறைந்த போராளிகளால் செயலுருவம் பெறும் 'கரும்புலிகள்' போர்வடிவம் சிறிலங்கா இராணுவத்தால் என்றுமே எதிர் கொள்ளமுடியாத ஓர் போர் முறையாகவே மாறியுள்ளது. இப் போர் வடிவமானது சிறிலங்கா போர் முறைத்திட்டங்களையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் சிதைப்பதோடு தமிழீழப் போராட்டத்தை நகர்த்திச் செல்லும் பிரதான உந்துசக்தியாக உள்ளது என்பதிலும் கேள்விக்கே இடமில்லை.

ஜெயராஜ்

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## 267 ஆம் நாள்

### நினைவலைகள்



## கப்டன் யசோதரன் (யசோ, வக்கில்)

## (மணியம் கிருஸ்ணதாஸ்)

பிறப்பு: 16-10-1964 வீரச்சாவு: 05.08.1990

தலைவர் பிரபா போர்வழி எழுந்து
வன்னியர் மண்ணில் பொறுப்பினை ஏற்றார்
மாற்றான் படைகள் மண்ணைவிட்டு அகலவும்
தாக்குதல் தொடுத்தான் தளபதி யசோதரன்.

தலைவர் பெரு நம்பிக்கைப் பொறுப்புடன்
மெய் பாதுகாப்பு மேன்மை சொல்கடமையுடன்
இந்திய மண்ணில் இணைந்தே நின்றவன்.
போர் முனை ஏற்று புதுயுகம் படைத்தவன்.

புலிகளைத் திரட்டி போர்ப்பயிற்சி தந்ததுடன்
மகளிர் அணியை பொறுப்புடன் வளர்த்தனன்
சிங்களப் படைமுகாம் சிதறிச் சிந்திட
கொக்குளாய், கொண்டச்சி, கொக்காவில், முகாம்களில்
அதிரடித் தாக்குதல்கள் அதிர்ந்தன காடுகள்.
செட்டிகுளம், முசல்குத்தி, மணலாறு, சாவகச்சேரி

யாழ் வன்னி முகாம்களுடன்
நெளுங்குளம் முகாமிலும் தேச விரோதிகளையும்
இந்திய சிங்களப் படைகளையும் நாடித்
தேடித் தேடி அழித்தவன்; தேசத்தைக் காத்தவன்.

அன்னியர் சின்னம் யாழ் கோட்டை தனையே
அழித்திட அலையென திரண்டு எழுந்தனர்
இவன் கையில் புலிகொடி ஏந்திய வண்ணமாய்
பாய்ந்தான் கோட்டை மதில்களைத் தாண்டினான்.

புலிகளின் பாய்ச்சலால் வீழ்ந்தது கோட்டை வீணர்கள் ஓடினர்.
எதிரியின் குண்டினை நெஞ்சினில் ஏந்திய யசோதரன்
நெஞ்சின் குருதி நிலத்தினை நனைத்திட
விருப்புடன் வீரச்சாவினை ஏற்றவன்.

யசோதரன் கரத்தில் ஏந்திய ஆயுதங்கள்
அவன் சகோதரர்களின் கைகளிலே இன்றும்
உன் துப்பாக்கியுடன் உன் தம்பி
யசோகணேஸ் பூநகரியில் சமர்க்களமாடி
சாவினை ஏற்றான். உன் இலட்சியத்திற்காய்
பெற்றோர் விருப்புடன் புலி படையில் சேர்த்தனர்
போர்க்களத்திற்குநெற்றியில் திலகமிட்டு அனுப்பினார்
அன்னை மனோன்மணி.
உன்துப்பாக்கி இன்றும் எத்தனை போர்க்களங்களில்
இலட்சிய வேட்கையுடன். உன் பாதையில்
கனவுகள் நனவாகும் காலமும் மலர்ந்திடும்
ஈழமும் இனிதாக இணைந்தே பிறந்திடும்.

05-08-1990-ல் இவருடன் யாழ் கோட்டைச் சமரினில் வீரச்சாவெய்திய அனைத்துப் போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.



## 2ஆம் லெப். யசோகணேஸ்

## (மணியம் சிவகணேசமூர்த்தி)

பிறப்பு: 05-08-1973 வீரச்சாவு: 11-11-1993

விண்ணிலே பிறந்த இடியோசை போல்
மண்ணிலே பிறந்த ம வீரா யசோகணேசா
அந்நியர் வேட்டைக்காடாய் எமது நிலம்
ஆக்கிரமித்து அழித்திட்ட வேளை
ஆர்த்தெழுந்து புலிப்படையில்
அணிதிரண்ட கிழக்கின் சுடரே -

பேரிடியாய் ஓர் வெடியோசை
பூநகரியில் புலிகள் இறங்கி அழித்திட
திகைப்புற்ற இராணுவம் திணறி
என்னவென எழுந்து நிமிர்கையில்
சடசடவென குண்டு மழையுடன்
சரிந்தனர் சண்டாளர் பூநகரி சிவந்திட
விடிந்தது வெற்றியுடன் அதிகாலை
வெற்றிச் செய்தியுடன் வீழ்ந்த உன் செய்தியும்...
வீரனே யசோகணேசா நீ விழவில்லை - நீ
விதையாகிப் போனாய் அண்ணன் கப்டன் யசோதரன்
பாதையிலே நீயும் பயணமானாய்
நீண்ட பயணம்தான் ஆயினும் - நீ
கொண்ட இலக்கு தவறாது இலட்சியம் சாகாது
உன்வழி நாளை விடியும்
நமக்கொரு நாடு வரும் நம்பிக்கையுடன்
போராடுவோம். உன் பின்னால் எம் குடும்பம்.
எம் மக்கள்.

11-11-1993-ல் இவருடன் பூநகரி தவளைஇராணுவ நடவடிக்கையில் வீரச்சாவெய்திய அனைத்துப்போராளிகளையும்நினைவு கூருகின்றோம்.


அம்மா, அப்பா, சகோதரர்கள்,
சகோதர போராளிகள்,
போராளி நண்பர்கள்

யசோ இல்லம்
வவுனியா.

யசோ இல்லம்
5 சந்தி, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10028)

## 3ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்



மாணிக்க முத்தாக
17.10.1973

மரத்தலைவர் சொத்தாக
05.08.1991

வீரவேங்கை
**ஜெயசிந்த்/சரண்ராஜ்**
(குலசிங்கம் கபிலன்)
(யாழ். இந்துவின் மைந்தன்)

ஆனையிரவு மண்ணிலே உன் இறுதி மூச்சு
ஆகாயம் கடல்வெளியெங்குமே உன்பேச்சு
தாயக விடிவிறகாய் தன்னுயிரைக் கொடுத்தவனே
ஆண்டுகள் மூன்று கடந்தாலும் நீங்காது உன்
நினைவுகள்

இவருடன் வீரச்சாவைத் தழுவிய அனைத்து மாவீரர்கட்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

82A, சீனியர் லேன்,
கலட்டி
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.
(இ)

## நவீன கன்டுபிடிப்புகள்

★ 'ரைம் லொக்' எனும் கருவி ஒன்று ஜாப்பானினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தொலைக் காட்சிப்பெட்டியுடன் இணைத்து விடல் வேண்டும். ரிவி நேர அட்டைகள் நேரம் குறிப்பிடப்பட்டு விற்பனையாகின்றது. இதனை வாங்கி இக் கருவியினுள் புகுத்திவிட்டால் அந்த அட்டையில் ஒரு மணித்தியாலம் எனக் குறிப்பிட்டிருப்பின் அந்த ஒரு மணி நேரம் மட்டுமே தொலைக்காட்சி இயங்கும். பாடசாலைப் பிள்ளைகள் வரையறுத்து தொலைக் காட்சியை பார்ப்பதற்கு இக் கருவி சிறந்ததாக அமைந்துள்ளது. இதைவிட இதில் இன்னோர் புதுமையும் புகுத்தப்பட்டுள்ளது இதனை பெற்றோர் வெளியில் செல்லும் போது எடுத்துச் சென்றால் தொலைக் காட்சியை எவருமே இயக்க வைக்க முடியாது.


★

★ ஜப்பான் புதியதொரு ரயரை உற்பத்தி செய்துள்ளது. இந்தப்புதிய ரயர் ஓட்டை யாகாது, காற்றுப் போகாது, கிழியாது, சுருங்காது என்றெல்லாம் தடுக்க முடியாது. என்றாலும் ரயருக்கு ஏதாவதொன்று ஆகிவிட்டால் வாகனம் நடு வீதியில் நின்றுவிடாது. அப்படி ஏதாவது ஆகிவிட்டாலும் அந்த ரயரில் இருந்து ஒரு வித ஓசை எழும். அந்த ஓசை வந்த பின் குறிப்பிட்ட வாகனம் 50 கிலோ மீற்றர் தூரம்வரை 55 கிலோமீற்றர் வேகத்தில் ஓடிய பின்பே காற்றுப்போகும். இதனால் கிடைக்கும் அந்தக் கால இடைவெளிக்குள் புதிய வாகனத்தை மாற்றிக் கொள்ள முடியுமாம்.

## அமெரிக்கா

இருத்தப்படுவதை உண்மையில் விரும்பாத போதும் இப்போதைய படையெடுப்பு முடிவிற்கு அவரும் ஒரு காரணமாகிவிட்டார். 3 வருடங்களாக எடுக்கப்படும் எம்முயற்சிக்கும் பயனில்லாத நிலையில் தனது ஆதரவாளர் தொடர்ந்து கொல்லப்படும் நிலையில் அமெரிக்க போக்கோடு முற்றிலும் ஒத்துப்போகாத நிலையில் அவர் வேறு வழியின்றி தற்போதைய முடிவை ஏற்றிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் இப்போது எழும் பிரதான கேள்வி என்னவென்றால், பன்னாட்டு படையணியில் அவர் பதவியிருத்தப்பட்ட பின் தோன்றும் நிலைமைகளை அவர் எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதுதான். ஏனென்றால் சனநாயக மரபுகள் சனநாயக அடிப்படை ஆட்சி மாற்றல் எதுவுமற்ற கெய்ற்றியில் எல்லாவற்றையும் முதலில் இருந்தே அவர் தொடங்க வேண்டும். பாதுகாப்பு படைகள், காவல் துறை என்பன முற்றிலும் புதிதாகவே உருவாக்கப்பட வேண்டும். அதுவரை பிறநாட்டுப் படையணியினர் பாதுகாப்பிலேயே அவர் தங்கியிருக்க வேண்டும். அதே வேளை ஆளும் வருக்கமாக இதுவரை இருந்த செல்வந்த வருக்கம் அவரை அழிக்கவே முயலும். 70 இலட்சம் கெய்ற்றிய மக்களில் பெரும்பான்மையானவர் ஏழ்மை மட்டத்திலேயே வாழ்வதால் அவர்கட்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும். சுருக்கின் இதுவரை காலமும் அமெரிக்க ஆதரவோடு கெய்ற்றியை கொள்ளையடித்த கொடுங்கோன்மை நிரம்பிய டுவாலியர் குடும்ப ஆட்சி விளைவித்த நாசவேலைகள் அண்மைக் காலமாக இராணுவ ஆட்சியாளர் மேற்கொண்ட அழிவு வேலைகள் இவை எல்லாவற்றின் சுமையும் அரிஸ்டீட்டே தாங்க வேண்டும். அதேசமயம் அமெரிக்க உதவியையும் இவ்வகையில் இன்று அவர் பெறவும் வேண்டும் இது ஒரு வரலாற்றின் விசித்திர நிலையல்லவா?

## 6-ம்மாதநினைவு அஞ்சலி



தோற்றம்
30-04-1937

மறைவு
08-02-1994

திதி:
05-08-1994

அமரர் உயர்திரு.
**பொன்னையா சின்னத்தம்பி**
அவர்கள்
(இத்தாவில், பளை)


அன்பினால் எம்மை வளர்த்து
நல்வாழ்வுக்கு வழிகாட்டியாக நின்று
பாசத்தால் எமைப் பிணைத்த
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.

எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (05-08-94) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

இத்தாவில்,
பளை.
(9017)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை சுரேஷ்
(சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன்)

தாய்மடியில்:
13-01-1969

வீரத்தாய்மண்ணில்:
05-08-1991

மண்ணின் விடுதலைக்காய்
தன்னுயிர் தனை ஈந்த
முத்தமிழ் ஈன்றெடுத்த
செல்வப் புதல்வன் (சுரேஷ்)
இதயமதை துயர் நிறைக்க
விழிகளில் நீர் சுமந்து
உன் நினைவுகளுடன்
நித்தமும் நாம்
வானத்தில் முழு நிலவாய்
வண்ணமுகம் காண்கிறோம்

இவருடன் 5-8-91 அன்று புல்லாவெளிச்சமரில் வீரச்சாவெய்திய சக போராளிகளையும் நினைவு கூருகிறோம். அத்துடன் அன்றையதினம் எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியில் சக போராளிகளையும், உறவினர்களையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்.

உமது நினைவால் வாடும்
- குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:-
787, நாவலர் வீதி (கார்த்திகா, பா, பா, முன்பாக)
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(8989)

## 3ஆம் ஆண்டு நினைவாக



அமரர் திருமதி
**பொன்னம்மா கந்தையா**
(உரிமையாளர் சு.க.கமம்253/3 முரசுமோட்டைபரந்தன்)

அன்னைமடியில்
28-04-1927

இறைவன் அரவணைப்பில்
08-08-1991

ஆண்டுகள் மூன்று உருண்டோடினாலும் உங்கள் அன்பும், பண்பும், அரவணைப்பும் எங்களை விட்டு ஒருபோதும் நீங்காது. எங்கள் இதயத் தெய்வமே, உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள்:- கந்தையா இலட்சுமணன் (J. P.)
கந்தையா வன்னியசிங்கம் (U. N. H. C. R)
ஜெனிவா
திருமதி கனகமணி பாலசுப்பிரமணியம் (சுவிஸ்)

மருமக்கள்:- திருமதி வள்ளியம்மை இலட்சுமணன்
திருமதி பாக்கியலட்சுமி சந்திரபாலன்
திருமதி கலாமதி வன்னியசிங்கம்
U. N. H. C. R (ஜெனிவா)
மற்றும் பேரப்பிள்ளைகள்

31, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

(9022)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

முன்னாள் விடுதலைப் புலிகளின் வடமராட்சி கிழக்கு பிரதேசப் பொறுப்பாளரும், யாழ். கோட்டை இராணுவ முகாம் தகர்ப்பில் **05-08-1990** அன்று வீரச்சாவு அடைந்தவருமாகிய,



## கப்டன் விக்னம்
### (கந்தையா தவராசா)

பிறப்பு:
07 - 08 - 1968

வீரச்சாவு:
05 - 08 - 1990

தம்பி விக்னமே!
கல்லறைக்குள் உன் உடலை விதைத்து
இன்றுடன் நான்காமாண்டு இறுதி நாளாம்
பாவி எங்கள் கனவில் வந்தென்றாலும்
பாசமிகு வார்த்தைகளைப் பகிர்வீர் ஐயா
கோவிலிலே வைத்துப் புலிவீரர் உமை
கும்பிட்டு குறைகளள்வோம் நின்று பாரீர்
நாளை மலரும் ஈழமதில் உங்கள் நாமம்
நட்ட கல்லும் பேசும் இது நடக்கும் ஐயா.

05-08-90 அன்று இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

05-08-94 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை-வடக்கு,
வடமராட்சி கிழக்கு.

இவர் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்.

(8959)

★ ★

## வாய் துர்நாற்றம் தடுக்க ஓர் வழி

சிலர் பேசும் போது அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் சுவையாக இருந்த போதும், அவற்றைக் கேட்காமல் பலர் வெகு தூரம் விலகிச் சென்று விடுவார்கள். வேறு சிலர் எட்ட நின்றே கதையை செவிமடுப்பர். இதற்கெல்லாம் காரணம் அந் நபரின் வாயிலிருந்து வீசும் துர்நாற்றமாகும்.

வாயில் துர்நாற்றம் ஏற்பட பற்களுக்கிடையில் ஒட்டிக்கொள்ளும் உணவுப் பொருள்கள் நுண் கிருமிகளின் செயற்பாட்டினால் அழுகும் நிலை அடைவதனாலும் துர்நாற்றம் ஏற்படும். நாக்கின் மீது படியும் அழுக்குகளும் இதற்கு ஓர் காரணமெனவும் பென்சில்வேனியாவிலுள்ள சுவாச சிகிச்சை மையத்தின் அமைப்பாளரான டாக்டர் ஜோன் றிச்சர் கூறுகிறார்,

நாக்கின்மேற் பரப்பில் மிகச் சுலபமாகபக்டீரியாக்கள்படர்ந்து கனவேகத்தில் விருத்தியடைகின்றன. இவற்றை வாய் கொப்பளிக்கும் மருந்துகளாலோ, பல் தீட்டும் பசைகளினாலோ சுலபமாக அகற்ற முடியாது. பற்களைத் தேய்ப்பதற்காகப் பயன்படுத்தும் பிரஷ்களினாலேயே நாக்கையும் அவதானமாக சுத்தம் செய்வதன் மூலம் பக்டீரியாப் பட்டலத்தை அகற்றிவிட முடியுமெனவும் இந்த டாக்டர் கூறுகிறார்.

★ ★

# 3-ம் ஆண்டு நினைவாக....



## கப்டன் லக்ஷி
### (முத்துலிங்கம் தங்கறஜனி) (சுதா)

தாய் மடியில்:
10. 10. 1973

தமிழ்மண் மீட்பில்:
05. 08. 1991

மூடிமுளிக்கு முன்னே மூன்று ஆண்டும்
ஓடி ஒளிந்ததுவோ உனைப்பிரிந்து - நாம்
தேடி அலைகின்றோம் உன் திருமுகத்தை - எம்
தேனமுதே மனக் கவலை தீர்க்கவாம்மா

மகளே உன் மறுவடிவில் உன்னவர்கள்
மாதமொருமுறையேனும் வந்திடுவார் - நீ
சிலவேளை மட்டும் எம்கனவில் வந்து
செல்வமொழி பேசிவிட்டுச் சென்றிடுவாய்.

கடந்த 05-08-1991 அன்று இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து மாவீரர்களையும் இந் நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கின்றோம். இன்று 05. 08. 1994 வெள்ளிக்கிழமை இவரின் இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி,
எலிசபெத் வீதி,
வடமராட்சி கிழக்கு.

(8912)

இவ்வண்ணம்
அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். சங்கீதா
### (செல்வி ரேணுகா கனகசுந்தரம்)

மலர்வு: 04 - 09 - 1974

வீரச்சாவு: 05 - 08 - 1990

யாழ் கோட்டையை மீட்டெடுக்க
மானமே உயிராய் மதித்திட்ட சங்கீதா
உனது கனவுகள் தமிழீழத்தில் மலரும்.

- குடும்பத்தினர்

சங்கீதா வீதி,
(இராமலிங்கம் வீதி)
திருநெல்வேலி கிழக்கு.

(9001)

# 4-ம் ஆண்டு நினைவலைகள்



## 2-ம் லெப்டினன்ட் டயஸ்
### (செல்வராஜா இராஜேந்திரகுமார்)

பிறப்பு
18-12-71

வீரச்சாவு
05-08-90

எம் உணர்வில் உயிரில் ஒன்றாய் கலந்த
உத்தம வீரனே
ஈரிரண்டாண்டுகள் இமைப்பொழுதில்
பறந்தாலும் - நின்
புகழுடல் இந்நீள் வையகம் உள்ளளவும்
நிலைத்திருக்கும்.

05-8-90 இல் யாழ். கோட்டையில் இவருடன் வீரசாதனை படைத்த 29 மாவீரர்களையும் நினைந்து அஞ்சலிக்கின்றோம்-

டயஸ் வீதி,
இருபாலை.

(9010)

என்றும் உம் நினைவுடன்
குடும்பத்தினர்

## யாழ். மாவட்டத்தில் தேர்தல் முறைகேடு அதிகரிப்பு

### ஈ.பி.ஆர்.எல்.எப். முறையீடு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து தேர்தலுக்கான அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாகவும் எனவே அங்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சுதந்திரமாக இயங்க முடியாது இருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எப்ஐச் சேர்ந்த கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இக்கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் தீவுப் பகுதிகளுக்கு இன்னும் பொலிசார் அனுப்பப்படவில்லை என்றும் தேர்தல் தொடர்பாக முறைகேடுகளுக்கு தேர்தல் ஆணையாளரே பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் எனவே வடபகுதிக்கான தேர்தலை ஒத்தி போடுவதற்கு இன்னும் முடியும் என்றும் இதனை விரைவில் மேற்கொள்வார் என தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## மூன்றாம் சக்தியை தலையிட வைக்கும் திறமை எமக்கு உண்டு

### ஈ.பி ஆர்.எல்.எவ். குழுவினர் தெரிவிப்பு

(வவுனியா)

இனப் பிரச்சினையில் மூன்றாவது சக்தியை தலையிட வைக்கும் திறமை எமக்குண்டு என ஈ.பி.ஆர்.எல்.எவ். பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில், ஐ.நா. சபையில் எமது பிரச்சினையை எடுத்துரைத்த உற்ற நண்பனாக இந்தியா திகழ்கின்றது. எமக்கு இப்போது அந் நாட்டின் ஆதரவில்லை. உலக நாடுகளின் அனுதாபங்களில்லை. இந்த நிலை மாறவேண்டும் எனவும் அவர் கூறினார்.

## தொலைக்காட்சி நாடகம் எதிர்ப்பால் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு சுயாதீன சேவை தொலைக்காட்சியில், தொடராக வந்த கெதுமா எனும் சிங்கள தொலைக்காட்சி நாடகம், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலத்த எதிர்ப்பினை அடுத்து ஒளிபரப்பிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது.

70-77 வரையுள்ள சுதந்திரக்கட்சி ஆட்சிபற்றிய கருத்துக்களை இந்நாடகம் தெரிவித்துவந்தது.

## பொ.ஐ.மு. கூட்டம் மீது ஐ.தே.கவினர் தாக்குதல்

அனுராதபுரத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் தாக்கியதாகவும், இதனால் மூவர் காயமடைந்ததாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

அனுராதபுரத்திலுள்ள படிக்கட்டுவெவ என்னும் இடத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தை சுமார் நூறுபேர் கொண்ட குழுவொன்று தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழு வாகனங்களில் வந்தவர்களே தாக்குதலில் ஈடுபட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### படையினர்

யடுத்து சம்பவம் நடந்த இடத்திற்கு ஒருமைல் தொலைவில் அமைந்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் வீட்டிற்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் அனைத்துமுகாம் காவலரண்களில் இருந்தும் படையினர் அரைமணி நேரமாக வானை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மல்லாகம்

மிட்டுச் சென்றதுடன் அதிகாலை 1.30 மணியளவில் விமானமொன்றும் அப் பகுதியை வட்டமிட்டுச்சென்றது.

### உணவகம்

த்து ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்கள் பதற்றமடைந்து பதுங்குகுழிகளில் புகுந்து கொண்டனர்:

குசினிப் பகுதிகள் முற்றாகச் சேதமடைந்தன. சமையல் பாத்திரங்கள் அனைத்தும் சேதமடைந்து காணப்பட்டன. இப் பகுதியில் மேற்கொண்ட மற்றைய ஷெல்கள் தோட்ட வெளிகளில் விழுந்து வெடித்தன. (யோ)

### சட்டவிரோத

கொக்கிலும், மணிலாவிலும் சட்டவிரோத பிரயாண முகவர்களிடம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆபத்தை உணர்ந்தும் பொருட்படுத்தாமல் இலங்கையர்கள், பயணங்களில் ஈடுபடுவதாகவும், பொருட்களை ஏற்றிச் செல்லும் கொண்டெய்னர்களில், இவர்கள் ஒளிந்து செல்வதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். அதிர்ஷ்டமுள்ளவர்கள் சிலர் இவ்விதமான நீண்டதூர பயணங்களில் இடையிடையேகொண்டெய்னர்கள் திறக்கப்படுவதால் புதிய காற்று சுவாசிக்க வாய்ப்பு கிடைப்பதுமுண்டு. சில வேளைகளில் மூச்சுத் திணறலால், உயிரற்ற சடலங்களாக மீட்கப்பட்டதும் உண்டு என அவ் அதிகாரி மேலும் கூறினார்.

### வவுனியா

4 கொண்டென்சர் மைக்கிறோபோன்கள் உட்பட பல தடைசெய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் கடத்த முற்பட்ட மூவரும் கைதாகியுள்ளதாகவும் மேலும் கூறப்படுகிறது.

---

### நெஞ்சை நெருடும் 4-ம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் ஜொனி**

(செல்வன் தெ. சத்தியதாஸ்)

| ஈன்றவர் மடியில் | ஈழவர் மனதில் |
|---|---|
| 1970 - 01 - 09 | 1990 - 08 - 05 |

''வாழ்க்கையை விடுதலைப் போரினாலும்
மரணத்தை அஞ்சாத தியாகத்தினாலும்
கடைசிவரை கனப்படுத்திய எம் செல்வமே
உம்மை நாம் மண்ணில் புதைக்கவில்லை
எம் நெஞ்சிலே புதைத்துள்ளோம்''.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்,
நண்பர்கள்

பலாலி வீதி,
திருநெல்வேலி. (9008)

---

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 08 - 05**
**வெள்ளி இரவு**

8. 01 -கலைமஞ்சரி முதலில் நூல் அறிமுகம், அறிமுகமாவது ''அக்கரைச் சீமையில்'' எனும் நாவல். அடுத்து சிறுகதை- ''அன்னதானம்'' அதை அடுத்து கவிதை - ''சிந்தை தெளிந்திடச் செய்திடுவோம்''
8. 25 -கணப்பொழுது
8. 30 -செய்திகள்
8. 40 -அரசியல் அரங்கம் ''ஊழல் செய்வதில் மட்டுமல்ல அதை மறைப்பதிலும் உலக சாதனை புரியும் இந்திய அரசு''
8. 50 -வாத்தியகானங்கள்

**1994 - 08 - 06**
**சனி காலை**

7. 02 -மாவீரவணக்கம்
7. 15 -நீங்கள் கேட்டவை
7. 30 -செய்திகள்
7. 35 -பத்திரிகைச் செய்திகள்
7. 40 -நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

---

### 4-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
09 . 01 . 1970

★ ★

தாயக மண்ணில்
05 . 08 . 1990

**கப்டன் கண்ணன் (கண்ணாடி)**

(கந்தப்பிள்ளை அருட்செல்வன்)

ஆவணித் திங்கள் ஐந்தில்
அருந்தவக் கண்ணா! நீயும்
யாழ்நகர்க் கோட்டை தாக்கி
எதிரிக்கோர் இடியேறானாய்.
ஓவியமாகி நின்றாய் -
உன்னதமான தன்றாய்.

நந்தாவில் அம்மன் றோட், உன் பிரிவால் துயருறும்
கோண்டாவில் மேற்கு. - குடும்பத்தினர்

(9009)

---

### சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா - 1994

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை நடாத்தும் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா 06-08-94 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில்பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்களிற்கு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கு பரிசில் வழங்கப்படும். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

விழா சிறப்புற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டக்
கூட்டுறவுச் சபை

இல. 14, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10048)

---

### 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

05-08-1994



பிறப்பு
14.12.1973

வீரச்சாவு
05.08.1990

**2-ம்லெப்டினனட் சரத்பாபு**


(கந்தசாமி அகிலேஸ்வரன்)

துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில்
தூய விடுதலைக்காய் துப்பாக்கிதனை அணைத்தாய்
எல்லை மீறி வந்த எதிரிப்படை சிதற
இரும்பாய் நின்று இமயமாய் உயர்ந்தாய்

கோட்டையில் இவருடன் வீரச்சாவடைந்தஏனைய போராளிகளுக்கும் வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகிலேஸ்வரன் வீதி, குடும்பத்தினர்
கொக்குவில் கிழக்கு. (9021)

# மரண அறிவித்தல்கள்



## வண. சகோதரர் ஏ.எம். தோமஸ் S. S. J.

(ஹட்டன் புனித டொன்பொஸ்கோ கல்லூரி முன்னாள் அதிபர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புனித சூசையப்பர் துறவற சபையின் முன்னாள் அதி சிரேஷ்டகுருவான வண. சகோதரர் ஏ.எம் தோமஸ் S.S.J அவர்கள் 02-08-1994 அன்று திருகோண மலையில் காலமானார். இவரின் நல்லடக்கம் 05-08-1994 இன்று திருகோணமலை புனித மரியாள் சேமக்காலையில் இடம்பெறும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று மாலை 5.30 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
அருட்சகோதரர்கள்.

43, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம். (9027)

## திருமதி இராசையா கனகம்மா

(கொக்குவில்)

திருமதி இராசையா கனகம்மா 1994.08.04-ல் காலமானார். அன்னார் வடலியடைப்பை பிறப்பிடமாகக்கொண்ட காலம் சென்ற நீர்ப்பாசன இலாகா ஓவசியரின் அன்பு மனைவியும், காலம்சென்ற தங்கராசா மற்றும் இராமச்சந்திரன் (அளவெட்டி), நாகராணி (மல்லாகம்), பேரின்பராசா (நுவரெலியா), புஸ்பராசா (கொக்குவில்) என்போருடைய அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 4 8.94 அன்று துர்க்காபுரம் மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவிக்கிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
இ. இராமச்சந்திரன் (மகன்)
வேலை மேற்பார்வையாளர், (90 18)
லங்கா சீமெந்து லிமிட்டெட்., காங்கேசன் துறை.

## திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி

வேலணை மேற்கைப்பிறப்பிடமாகவும், தற்போது கொக்குவில் மேற்கில் வசித்தவருமான திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி 01-08-94 அன்று கொழும்பில் காலமானார். இவர் ஏரம்பு பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் பார்பதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், லலிதாதேவி, சர்வேஸ்வரி. சிவனேசன், லோகநாதன், பத்மநாதன், கலைவாணி, குகதாசன், சிவகுமார் ஆகியோரின் அருமைத் தாயாரும், பூபாலபிள்ளை, சண்முகரெட்ணம், சாமிளா. யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கைலாசபதி, மலர்மகள், செவ்வந்திநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜமுகன். கயல்விழி, நர்மதா, நமசிவாயம், மயூரன், சண்முகப்பிரியா, சொரூபன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-08-1994 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்
ஏ. பசுபதிப்பிள்ளை
(கணவன்)

(9029)

# விமானம் என்னை தாண்டிய மறுகணம் கண்ணைப் பறிக்கும் ஒளிபளிச்சிட்டது

## குண்டு வீச்சில் உயிர் தப்பியவர் தகவல்

(சிவகுணபாலன்)

''தலைக்கு மேலால் வீட்டுக்கூரையை உரசிக்கொண்டு செல்வது போல புக்காரா பேரிரைச்சலுடன் என்னைத் தாண்டிய போது பயத்தினால் அருகில்நின்ற தென்னை மரத்தை இறுகக்கட்டிப்பிடித்துக் கொண்டேன். மறுகணம் கண்ணைக்கூசவைக்கும் வெளிச்சம்படலையடியில் பளிச்சிட்டது. வானம் இடிந்து தலையில் வீழ்ந்தது போல பாரிய வெடி ஓசை கேட்டது தொடர்ந்து என் மீது மண்ணும் கற்களும் வீழ்ந்தன''

இவ்வாறுநேற்றுஅதிகாலை புக்காரா விமான குண்டுவீச்சின் போது மயிரிழையில் உயிர் தப்பிய திருமதி வாதவூரர் தெரிவித்தார். இவர் நின்ற இடத்திலிருந்து சுமார் 25 யார் தூரத்தில் இக்குண்டு வீழ்ந்து வெடித்தது. அவரது வீடு பலத்த சேதமடைந்ததுடன் அவ்வளவில் நின்ற தென்னை மரங்கள் வெட்டி வீசப்பட்டும்அடியோடு பெயர்த்தெறியப்பட்டும் காணப்பட்டன. அருகில் மூன்று வீடுகள் பலத்தசேதமடைந்திருந்தன.

சம்பவம் பற்றி மேலும் அவர் விபரிக்கையில்:

எனது கணவர் கொழும்பு சென்றுள்ளதால் நானும் மகளும் எனது தங்கை வீட்டில் இரவு சென்று உறங்குவது வழக்கம். நேற்றும் அவ்வாறே தங்கை வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளை புக்காரா விமானம் வட்டமிட்ட சத்தம் கேட்டது. அடுத்து எங்கோ குண்டொன்றும் வீழ்ந்து வெடித்த சத்தம் கேட்டது. உடனே தங்கையிடம் வீட்டுக்குச் சென்று உடுப்புப் பாக்குகளை எடுத்துக் கொண்டுவருகிறேன் என்று சொல்லி விட்டு வீட்டை நோக்கி வந்தேன்.

நான் வீட்டை அண்மித்த போது புக்காராவின் இரைச்சல் அதிகரிக்கவே பயத்தில் தென்னை மரத்தை இறுகப் பற்றிக் கொண்டேன். அப்போது எனது வீட்டுப்படலையடியில் பெரும் வெளிச்சத்தை அடுத்து பாரிய ஓசையுடன் குண்டு வெடித்துச் சிதறியது. தென்னை மரத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்த நான் அப்படியே சரிந்து வீழ்ந்து விட்டேன் என்றார்

அவர் மேலும் கூறுகையில் வீட்டுக்குச் சென்ற என்னைத் தேடி எனது தங்கையும் மகளும் வந்தபோது மண்மூடிய நிலையில் உடலெங்கும் புழுதியுடன் கிடந்த என்னை கைத்தாங்கலாக தங்கையின் வீட்டுக்கே கொண்டு சென்றார்கள். விடிந்தும் விடியாத பொழுதில் வந்து பார்த்த போது வளவில் நின்ற தென்னைகள் வேரோடு பிடுங்கி எறியப்பட்ட நிலையில்பாதையில் கிடந்ததை முதலில் கண்டேன். பின்னர் வீட்டை அண்மித்த போது வாசலில் கட்டியிருந்த ஆடு வயிறு பிளந்த நிலையில் இறந்து கிடப்பதையும் கதவுகள் உடைந்து கூரையே இல்லாத நிலையில் வீடு சிதறிக் கிடப்பதையும் கண்டேன் என்றார்.

## றுகுணுவை நிறுத்த அரசு முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றிக்கொண்டுவரும் ''றுகுணு'' கப்பலை நிறுத்த சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது ஏற்றப்படும் பொருட்களை பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கிவிட்டு செல்வது அதன்யாழ் குடாநாட்டிற்கானஇறுதிப்பயணம்என மேலும் தெரியவருகின்றது.

இதேவேளை இதனைவிட அளவில்சிறியகப்பலான 'ஹபரண' கப்பலை இதற்காக பயன்படுத்தப்படுமென பரவலாகநம்பப்படுகின்றது. (நி)

# யாழ். மாவட்டத்தில் 445 வாக்களிக்கும் இடங்கள்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் பொதுத் தேர்தலுக்காக 445 வாக்களிப்பு நிலையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன, தேர்தல் ஆணையாளர் இத் தகவலை வெளியிட்டார்.

ஊர்காவற்றுறையில்38-ம், வட்டுக்கோட்டையில் 44-ம், காங்கேசன்துறையில் 45-ம், மானிப்பாயில் 45-ம், கோப்பாயில் 45-ம் உடுப்பிட்டியில் 39-ம், பருத்தித்துறையில் 36-ம், சாவகச்சேரியில்44-ம், நல்லூரில் 32-ம், யாழ்ப்பாணத்தில் 27-ம், கிளிநொச்சியில் 50-ம் வாக்களிப்பு நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# ஐ.தே.க. கூட்டத்தை குழப்பிய யானைக் கூட்டம்

அனுராதபுர மாவட்டத்தில் நடைபெற்ற ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் கூட்டத்தை யானைகள் குழப்பியடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தேர்தல் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது நிகழ்ச்சிகள் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்பப்பட்டன இதன்போது எழுந்த பேரிரைச்சலால் ஆத்திரமுற்ற யானைக் கூட்டம் ஒன்று ஆளும் ஐ. தே. கவினரின் தேர்தல் கூட்டத்திற்குள் புகுந்து குழப்பியதுடன் கட்சி ஆதரவாளர்களையும் விரட்டியடித்ததாம்.

பலாலி

யினரில் பலரைக் கொன்றும் வீரசாதனை படைத்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஆறு கரும்புலி மாவீரர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாகச் சென்ற இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரர்களுக்கும் இன்றிலிருந்து மூன்று நாட்களுக்குத் தமிழீழமெங்கும் வீரவணக்கம் செலுத்தி நினைவு கூரப்படவுள்ளது.

இம் மூன்று நாட்களிலும் தமிழீழத்தின் இல்லங்கள் தோறும் இம் மாவீரர்களின் உருவப்படங்கள் வைத்து ஈகச்சுடரேற்றி மலர் சாத்தியும், தமிழீழத்தின் வீதிகள் தோறும் தோரணம், கறுப்பு, சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டியும் முக்கிய இடங்களில் கரும்புலிகள் பாடல்கள் இசைத்தும்-

இரண்டாம் நாளில் இம் மாவீரர்களின் உருவப் படங்கள் தாங்கிய ஊர்திகள் கோட்ட மட்டத்தில் முக்கிய வீதிகளூடாக எடுத்து வரப்படுகையில் தமிழீழ மக்கள் தமது இல்ல வாயில்களில் குத்துவிளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செய்தும்-

இறுதி நாளாகிய ஏழாம் திகதிகோட்ட மட்டத்தில்நடைபெறவுள்ள இறுதி வீரவணக்கக் கூட்டத்திலும் பெருந் திரளாகக் கலந்து கொண்டும் தமிழீழ மக்கள் அனைவரையும் தமது எழுச்சி பூர்வமான இறுதி வீரவணக்கத்தைச் செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## குணசிங்கம் குணராஜ் (சதன்)

02-08-1994 அன்று பலாலியில் நடந்த மோதலில், கரும்புலிகளுக்கு உறுதுணையாகவிருந்து அவர்களுடன் வீரச்சாவடைந்த மேஜர் சேரன் (அசோக்), குணசிங்கம் குணராஜ் (சதன்) (வீரமாணிக்கம் தேவன் துறை மயிலிட்டி) அவர்கள் வீரச்சாவடைந்தார் இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்

தகவல்:
குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:-
தும்பளை றோட்,
4-ம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (9030)

## திருமதி இராஜலஷ்மிதேவி தருமராசா (இராசாத்தி)

மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி இராஜலஷ்மிதேவி நேற்று (4-8-94) அகால மரணமானார். அன்னார் தருமராசா (லங்கா சீமெந்து நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும், தனுஷன், தனுஜா, தர்சிகா, அனிதா, அபிதா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை ஐயனார் கோவிலடி சுன்னாகத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சி. தருமராசா
[கணவர்]

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம். (சி-10049)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது